மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்
Mutram monthly Septembar 2014
விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 9 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




## பாரதிதாசன் கவிதைகள்

## திருத்தல வரலாறு

## காதுள்ளோர் கேட்கக்கடவர்




Anantha
FESTIVAL OFFER
Upto
30% off
Conditions apply.
www.anantha.info
An ISO 9001 : 2000 Company
Meena Stores - Viruthachalam

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly September 2014

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம்.ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம்.ஏ.,
**பி.எம்.பாலா**
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**பழனி**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

ஆசிரியர் தினமும் சமற்கிருதத் திணிப்பும்
– தலையங்கம் .......... 4

நீதியரசர் சதாசிவம்
கேரள ஆளுநர்.......... 6

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்றத்தமிழ் மொழி.......... 7

அறம் தலை பிரியா ஆறு! .......... 10

அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தின்
42 ஆம் ஆண்டு திருவிழா.......... 12

எல்லாம் தலைகீழாய்(கவிதை)
கவிஞர் இராம. பரஞ்சோதி.......... 15

மயிரின் மதிப்பு (சிறுகதை)
இருங்கோவேள்.......... 16

செவியுள்ளோர் கேட்கக் கடவர்
கவிஞர் ஜெயபாஸ்கரன்.......... 19

உண்மையைத் தேடி
இராஜாசிங்.......... 22

தமிழின் அருமை அறிந்த
தருண் விஜய்.......... 25

இயற்கை
பாவேந்தர் பாரதிதாசன்.......... 26

நிகழ்வுகள்.......... 27


ஐ.நா.விற்கு ஆதாரத்தை
அனுப்புங்கள்.......... 29

தமிழா இது
காசி ஆனந்தன் .......... 30

இலக்கியச் சுவடுகள்
பாவலர் சீனி சுந்தரமூர்த்தி .......... 31

பயனுள்ள இணையதளங்கள்
சான்றிதழ்கள் .......... 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.



# ஆசிரியர் தினமும் சமற்கிருத திணிப்பும்



ஆசிரியர் தினம், மிகவும் மதிப்பு மிக்க நாள் என்ற பார்வையில் கொண்டாடப்படுகிறது. சிறந்த ஆசிரியர்களுக்கு குடியரசுத் தலைவர் பரிசுகளைத் தருகிறார், பாராட்டுகிறார். இந்நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் ஐந்தாம் தேதி கொண்டாடப் படுகிறது.

திரு. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி தனது கடும் உழைப்பாலும் முயற்சியாலும் கல்லூரிப் பேராசிரியராக உயர்ந்து, கல்லூரி முதல்வராகவும் திகழ்ந்தார். இவர் ஒரு சிறந்த தத்துவ மேதை. நமது இந்தியத் திருநாட்டில் இரண்டாவது குடியரசுத் தலைவராக பொறுப்பேற்று அப்பதவிக்கு பெருமை சேர்த்தார்.

இவரது பிறந்தநாள்தான் செப்டம்பர் ஐந்து. இவரைப் பேற்றும் விதமாகவும், கல்விக்கு பெருமை சேர்க்கும் விதமாகவும் இவருடைய பிறந்தநாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் மாணவர்கள் தங்களது ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளையும் பரிசுகளையும் வழங்குகின்றனர்.

ஆசிரியப்பணி மிகவும் புனிதமான ஒரு பணி என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட கருத்து. இப்பணியைச் செய்பவர்களுக்கு சமுதாயத்தில் ஒரு சிறப்பான மரியாதை உண்டு என்பதை நாம் அறிவோம். ஆனால் ஆசிரியர்கள் அரசால், கல்வி நிறுவனங்களால் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்று பார்த்தோமானால், ஒரு அரசு ஆசிரியர்களுக்கு சலுகைகளை வழங்குகிறது, மற்றொரு அரசு அவர்களை ஒடுக்குகிறது. ஆசிரியர்கள் தங்களது பணியினைச் செம்மையாகச் செய்கிறார்களா?

என்றால் பெரும்பாலும் செய்கிறார்கள். சிலர் முக்கியமாக சிற்றூர்களில் பணியாற்றுபவர்கள் தவறுகிறார்கள். என்றாலும் சமுதாயம் ஆசிரியர்கள் மேல் மிகப்பெரிய மரியாதையை வைத்திருக்கிறது.

தமிழகத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் தகுதி காண் மதிப்பெண் முறையை (வெயிட்டேஜ்) ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை கையி லெடுத்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். தங்களது சான்றிதழ்களை அரசிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்கிறார்கள். தேர்தல் ஆணையம் சென்று, தங்களது வாக்காளர் அடையாள அட்டையை திருப்பிக்கொடுக்க முனை கின்றனர். இப்படிப்பட்ட நிகழ்வுகளெல் லாம் ஆசிரியர் தினத்தன்று நடப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

தங்கள் கையில் அதிகாரம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நினைப்பில் நடுவண் அரசு அவ்வப்போது தகாத செயல்களைச் செய்து வருகிறது. சில நாட்களுக்கு முன் சமற்கிருத வாரம் என்று அறிவித்து அதை எல்லாரும் கடைபிடிக்க வேண்டும் என்றது.

மொழி ஆர்வலர்களும், நேர்மையாளர்களும், தமிழக அரசும், இது சரியான நடவடிக்கை அல்ல என்றபோது நடுவண் அரசு பின்வாங்கியது. இப்போதோ ஆசிரியர் தினத்தை 'குருஉத்சவ்' என்று பெயர் மாற்றிக் கொண்டாட வேண்டும் என்று ஆணையிடுகிறது. காலம் காலமாக ஆசிரியர் தினம் என்று கொண்டாடப்பட்ட நாள், குருஉத்சவ் என்ற சமற்கிருதத் தாக்கத்தோடு வருவதை மொழி ஆர்வலர்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும். இப்படிப்பட்ட நடுவண் ஆணைகள் சரியானதல்ல என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு விளை விக்கும் செயல்களை இந்தி, சமற்கிருத திணிப்பு என்ற நிலையை கையிலெடுத்துக் கொண்டு, நடுவண் அரசு புகுத்துமானால், அது வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியத் திருநாட்டின் அடிப் படையை ஆட்டம் காண வைத்துவிடும். இனி மேலாவது மொழிவாரி மாநிலங்களின் நலனில் அக் கறை கொண்டு, மக்களின் உணர்வுகளுக்கு மதிப் பளித்து ஆட்சி நிர்வாகத்தை நடத்துமா நடுவண் அரசு? ◆

# தமிழா! நீ பேசுவது தமிழா..

கவிஞர் காசி ஆனந்தன்'



அன்னையைத் தமிழ்வாயால் மம்மி
என்றழைத்தாய்..
அழகுக் குழந்தையை பேபி என்றழைத்தாய்..
என்னடா தந்தையை டாடி என்றழைத்தாய்..
இன்னுயிர்த் தமிழை கொன்று தொலைத்தாய்..

உறவை லவ் என்றாய் உதவாத சேர்க்கை..
ஒய்ப் என்றாய் மனைவியை பார் உன்றன்
போக்கை..
இரவை நைட் என்றாய் விடியாதுன் வாழ்க்கை..
இனிப்பை ஸ்வீட் என்றாய் அறுத்தெறி
நாக்கை..

வண்டிக்காரன் கேட்டான் லெப்ட்டா? ரைட்டா?
வழக்கறிஞன் கேட்டான் என்ன தம்பி பைட்டா?
துண்டுக்காரன் கேட்டான் கூட்டம் லேட்டா?
தொலையாதா தமிழ் இப்படிக் கேட்டா?

கொண்ட நண்பனை பிரண்டு என்பதா?
கோலத் தமிழ்மொழியை ஆங்கிலம் தின்பதா?
கண்டவனை எல்லாம் சார் என்று சொல்வதா?
கண்முன் உன் தாய்மொழி சாவது நல்லதா?

பாட்டன் கையில வாக்கிங் ஸ்டிக்கா
பாட்டி உதட்டுல என்ன லிப்ஸ்டிக்கா?
வீட்டில பெண்ணின் தலையில் ரிப்பனா?
வெள்ளைக் காரன்தான் நமக்கு அப்பனா?

# நீதியரசர் சதாசிவம் கேரள ஆளுநர்

மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமை யிலான பாரதீய ஜனதா ஆட்சி அமைந்த பிறகு. முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி காலத்தில் நியமிக்கப்பட்ட மாநில கவர்னர்கள் நீக்கப்பட்டு கவர்னர்கள் நீக்கப்பட்டு புதிய கவர்னர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். மத்திய அரசு கேட்டுக்கொண்டும் சில மாநில கவர்னர்கள் பதவி விலக மறுத்தனர்.

அப்படி பதவி விலக மறுத்து வந்த, கேரள மாநில கவர்னர் ஷீலா தீட்சித் பின்னர் மனம் மாறி தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இந்த நிலையில் கேரள மாநிலத்தின் புதிய கவர்ன ராக உயர்நீதிமன்றத்தின் மேனாள் தலைமை நீதியர சர் சதாசிவம் நியமிக்கப்பட்டார்.

கேரள கவர்னராக நியமிக்கப்பட்டு இருக்கும் 65 வயதான நீதியரசர் பி.சதாசிவம், ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள காடப்பநல்லூரில் கடந்த 1949ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் தேதி பிறந்தார். இவரது தந்தை பெயர் பழனிச்சாமி கவுண்டர், தாயார் பெயர் நாச்சாயம்மாள்.

மாணிக்கம் பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்கூடத்தில் பள்ளிப்படிப்பைத் தொடங்கினார். பள்ளிப்படிப்பை முடித்த பின் சிவகாசியில் உள்ள அய்ய நாடார் கல்லூரியில் பி.ஏ.பட்டம் பெற்ற பி.சதாசிவம் பின்னர் சென்னை அரசினர் சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்து சென்னை ஐகோர்ட்டில் அரசு வக்கீலாக பொறுப்பு ஏற்றார்.

1973ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை 22 ஆண்டுகள் அரசு வழக்கறிஞராக இருந்தார். இவருடைய உண்மையான உழைப்பு, நேர்மையான செயல்களால் உயர்நீதிமன்ற நிரந்தர நீதியரசராக கடந்த 1996ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி தேர்வு செய்யப்பட்டார்.



கடந்த 2007ஆம் ஆண்டு பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களின் நீதியரசராக சண்டிகார் உயர்நீதிமன்றத்தில் பொறுப்பு ஏற்றார். அதன்பிறகு 2007ஆம் ஆண்டு ஆகஸ்டு 28ஆம் தேதி உச்சநீதி மன்றத்தின் நீதியரசர் ஆனார். பின்னர் பதவி உயர்வு பெற்று கடந்த 2013ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி உச்சநீதிமன்றத்திதன 40வது தலைமை நீதியரசராக பொறுப்பு ஏற்றார். கடந்த ஏப்ரல் 26ஆம் தேதி அந்த பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

“முல்லை பெரியாறு சிக்கலுக்கு நல்ல தீர்வை கொண்டு வருவேன்“ என்று கூறும் கேரள ஆளுநர் ,நீதியரசர் பி.சதாசிவத்துக்கு சரஸ்வதி என்ற மனை வியும், சீனிவாசன், செந்தில் ஆகிய 2 மகன்களும் உள்ளனர். மூத்த மகன் சீனிவாசன் கம்ப்யூட்டர் பட்டப்படிப்பு முடித்து கோவையில் தொழில் செய்து வருகிறர்ர். 2 வது மகன் செந்தில் பட்டப் படிப்பு முடித்து விட்டு விவசாயத்தை கவனித்து வருகிறார்.

**- இமயவரம்பன்**

இயற்றமிழன்

சோம்பல்தான் காரணம் என்று கூறுவது பொருந்தாதென டக்கர், யெஸ்பர்ஸன் முதலான மொழிநூலறிஞர் விளக்கியுள்ளனர். sayce, introduction to the science of language சோம்பல் என்பது செய்யும் வேலையில் ஊக்கமின்மை, வேலையில் இன்பமின்மை, வேலையைக் குறைத்துக் கொள்ளும் வேட்கை இவற்றின் விளைவே ஆகும். ஆனால், மக்களின் வாழ்க்கையில் சோம்பல் மிகுந்தவர்களே பேச்சு மிகுந்தவர்களாக இருக்கக் காண்கிறோம்.

பேச்சு ஒரு வேலையாக எண்ணப் படுவதும் இல்லை. பேச்சில் ஊக்கம் இல்லை என்றும் இன்பமில்லை என்றும் உணர்வோர் மிகச் சிலர். பேச்சைக் குறைத்துக்கொள்ள விரும்புவோர் மிகச் சிலர். ஆதலின், பெரும்பான்மையோரால் திரிபடையும் சொற்களின் குறுக்கத்திற்கு அவர்களைக் காரணம் என்று கூறல் பொருந்தாது.

கூறினும், அவர்கள் சோம்பேறிகள் என்று கருதல் தவறான கருத்தாகும். பேச்சில் ஊக்கமும் இன்பமும் இழந்து அதைக் குறைத்துக் கொள்ள நாடுவோர், கலைத்துறையிலோ எண்ணக் கடலிலோ

# இலக்கணங்களின் வழி நிற்கும் ஒப்பற்றத் தமிழ் மொழி 22



ஓய்வின்றி உழைக்கும் சிறந்த அறிஞரே, அல்லாமல், சோம்பேறிகள் அல்லர்.

மற்றொரு தடையும் ஆராயத்தக்கது. சோம்பலின் விளைவு தீமையே: சோம்பலால் இழத்தல் நேருமே அன்றி ஈட்டல் நேராது. ஆயின் சொற்களைக் குறுக்கி வழங்குதலால், பேசும் மக்களுக்கு யாதொரு தீமையும் விளைவதில்லை. இழத்தல் ஒன்றும் இல்லை. பேசும் முயற்சி குறைந்து பேசும் காலமும் சுருங்குவதால் நன்மையே விளைகின்றது எனலாம். ஆதலின் இதனைச் சோம்பலின் விளைவு என்று கூற முடியாது. சொற்களின் வடிவம் சிதைதல் இழப்பு அன்றோ என வினவலாம்.

இழப்பு மிகுதியா, ஈட்டல் மிகுதியா என்று சீர்தூக்கல் வேண்டும். இழப்பு மிகுதியாயின் சோம்பல் என்று கூறுவது பொருந்தும். ஈட்டல் மிகுதியாயின் அதனைச் சிக்கனம் என்று கூறல் வேண்டுமன்றோ? ஒருவர் இருவர் சோம்பலால் செய்த மாறுதல்களைப் பரந்த உலகம் கண்மூடி ஏற்றுக்கொள்ளல் இயலுமா? மொழியில் புகும் ஒவ்வொரு புதுமையும் மாறுதலும் முதலில் ஒருவரால் புகுவனவே ஆகும். ஒருவர் முதலில் பேச. அதனைக் கேட்பவர் அதனை ஏற்கலாம், அல்லது ஏற்காமலும் விடலாம். இவ்வாறே ஒருவர் வாயிலாகப் புகுந்த மாறுதல் உலகத் தாரால் உடனே ஏற்றுக் கொள்ளப்படுவ தில்லை.

மக்கள் ஆளும் எதிர்ப் பைக் குறைத்துச் செல்வாக்கைப் பெருக்கிப் பிறகே சட்டமாகின்றது அன்றோ? மொழித் துறையிலும் இவ்வாறே ஒவ்வொரு சீர்திருத்தமும் ஒருவரிட மிருந்து வெளிப்பட்டுப் பலரிடமும் பரவி நிலைக்க வேண்டுவதாயுள்ளது.

ஆகவே சீர்திருத்தம் செய்வோர்க்கும். அதனை ஏற்போர்க்கும் இடையே போராட் டமே உள்ளது என்று கூறலாம். ஆதலின் பயனற்ற புதுமையோ, நன்மையற்ற மாறுதலோ கண்மூடி ஏற்றுக்கொள்ளப்படு வதில்லை. சோம்பல் காரணமாகப் பிறந்த மாறுதல் ஒருநாளும் ஏற்றுக்கொள்ளப்படு வதில்லை. அதற்கு மாறாக, முயற்சி எளிமை என்னும் பயன்விளைக்கும் மாறுதல்களே தடையும் எதிர்ப்பும் இன்றி ஏற்றுக் கொள்ளப்படு கின்றன.

சொற்களைக் குறுக்கும் மொழிவழக்கு இத்தகையதே ஆகும். இவ்வாறு சொற்களைக் குறுக்கி ஒலிக்கும் மக்கள், வேண்டுமென்றே செய்வதும் இல்லை: அறிந்து செய்வதும் இல்லை. தங்களை அறியாமல் இயல்பாகவே செய்கின்ற மாறுதல்களை என்றே இவற்றைக் கருதவேண்டும். Phonetic change is the spontaneous working out of tendencies which the individual does not acknowledge to himself, in their efforts upon organs of whose structure and working he is almost or wholly ignorant-whitney, language and the study of language. வந்து விட்டது என்பதை வந்திடுச்சி, வந்துச்சி, வந்த்சி என்றெல்லாம் மாற்ற வேண்டும் என்று இந்தக் காலத்திலும் எவரும் எண்ணித் துணிந்து ஒலிப்பதில்லை. ஆனால் ஒலி, எளிமையை நோக்கி மாறிக்கொண்டிருக்கின்றது: அதனால் சொற்களும் குறுகிக் கொண்டிருக்கின்றன.

இதுதான் மொழியின் இயல்பான மாறுதல், பிறர் புதியதெனப் புகுத்தலும், பழையதெனக் கழித்தலுமா கிய செயற்கை முறை இங்கு ஒன்றும் இல்லை. செயற்கைமுறையாக ஒருவர் எண்ணி மாறுதல் செய்யத் தொடங்கின், அம்மாறுதல் எதிர்க்கப்படும், ஏற்கப்படாது, மொழியைப் பொறுத்த வரையில் தனி மனிதன் ஆட்சி இல்லை: மக்கள் பலரும் உடன்பட்டு நடத்தும் குடியாட்சி முறையே உள்ளது

.The speakers of a language thus constitute a republic or rather, a democracy, in which authority is conferred only by general suffrage and for due Cause, and is exercised under constant supervision and control-whitney, language and the study of language. மொழி என்பது ஒருவர் கருத்தையோ உணர்ச்சியையோ மற்றவர்க்கு உணர்த்துவதற் குப் பயன்படும் கருவியே ஆதலின், அந்தப் பயன்

குன்றாத எல்லை வரையிலுமே சொற்களின் உருவம் திரியும்.

பொருளுணர்த்தும் பயன் குறையுமானால் சொற்களின் உருவம் திரிவதில்லை. பேசுவோர்க் கும் கேட்போர்க்கும் இடையே நிகழும் சிறு போராட்டம் என்றே இதைக் குறிப்பிடலாம். பேசுவோர் சொற்களை ஒலிப்பதற்கு எளிய னவாகத் திரிக்க முயல்கின்றனர்:

திரிபு அளவு கடந்து செல்லும்போது, கேட்போர் பொருள் விளங்காமல் இடர்ப்படு கின்றனர். அந்த இடர்ப் பாடு நேராமல் சொற்களை இன்னும் சிறிது தெளி வாகவே ஒலிக்கவேண்டும் என்று பேசுவோர் முயல் கின்றனர். ஆகவே எளிமை கருதித் திரித்தல் ஒரு புறம், இவ்வாறு இருவகை முயற்சிகளுக்கு இடையே சொற்களின் திரிபு ஓரளவில் நிற்க நேர்கின்றது.

மொழியை வளர்த்துக் காப்பது மக்களின் முதல் நோக்கம் அன்று. ஆனால், மொழியை வளர்த்துக் காப்பதன் வாயிலாகத் தங்கள் வாழ்வைக் காத்துக் கொள்வதே முதல் நோக்கமாகும். ஆதலின், தங்கள் வாழ்க்கைக்கு ஏற்றவாறு மொழியை மாற்றிய மைத்துக் கொள்கின்றனர், அரிய ஒலிகளை, எளிய ஒலி களை விடாமல் காத்து, வேண்டாத ஒலி களைப் புறக்கணித்துவிடுகின்றனர், பல வகைச் சொற் களுள், இன்றியமையாத அசைகளை ஒலித்து ஏனைய வற்றை மறந்துவிடுகின்றனர். இவ்வாறு செய்வதால் சொற்கள் குறுகிவிடுகின்றன.

ஆதலின், இதனைக் குறைபாடு என்று கருதுதல் எவ்வாறு பொருந்தும்? டாக்டர் ஜான்ஸன் என்னும் ஆங்கில நாட்டுப் பெரும் புலவர் தாம் எழுதிய ஆங்கில அகராதியில் இதனைப் பிற்போக்கான தொரு குறை என்றே குறித்துள்ளார்.


Tongues, like governments, have a natural tendency to degeneration. Dr.johnson, preface to his dictionary. பழைய உலகம் நல்ல உலகம் என்றும், இன்று வாழும் உலகம் பொல்லாத உலகம் என்றும் கருதும் தவறான மனப்பான்மையே இதற்குக் காரணம் என்று யெஸ்பர்ஸன் கருதுகின்றார்.

இவ்வாறு சொற்கள் மாற இடங்கொடுத்தலா காது என்று அறிஞர் பலர் செய்த முயற்சியே இன்று ஆங்கிலச் சொற்கள் எழுதும்போது ஒருவகையா கவும், ஒலிக்கும்போது மற்றொரு வகையாகவும் இருத்தற்குக் காரணமாகும். Engish spelling, under the guidance of the printers, has become a mere system of marks and symbols, arranged upon no principle, selected with no rational purpose, each of which by a separate effort for the memory is associated with some sound or word. Sayce, introduction to the science of language. மொழியைப் பேசும் மக்கள் பெரும்பாலோர், எழுதும் மக்கள் சிறு பான்மை யோர். பேசும் மக்கள் சொற்களை மாற்றி ஒலித்துப் பழகிவிட்டனர்.

ஆனால் எழுதும் மக்கள் அதற்கு ஏற்றவாறு எழுத்துக்களை மாற்ற மனம் இல்லாமல், பழைய எழுத்துக்களை விடாமல் காத்து வருகின்ற னர். அதனால் எழுதப்படும் சொல்லுக்கும் ஒலிக் கப்படும் சொல்லுக்கு வேற் றுமை பெருகி விட்டது. இந்தத் துறையில் சீர்திருத்தம் மிக இன்றிய மையாதது என்று உணர்ந்து பேரறிஞர் பெர்னாட்ஷா தம் செல் வத்தை அத்தொண்டுக் காக எழுதி வைக்கும் நிலையும் நேர்ந்துவிட்டது. ஆனால், இத்தாலிய மொழியிலோ ஜெர்மன் மொழியிலோ இவ்வாறு இல்லை, அம்மொழி களில் எழுத்துலகம் ஒலியுலகம் என்னும் இரண்டு உலகங்களிலும் சொற்கள் ஒத்த உரிமையோடு வாழ்கின்றன.

ஒன்றில் பழைய வேடமும் மற்றொன்றில் புதிய கோலமும் புனைவதில்லை, இரண்டு இடத்திலும் இயற் கையா கவே வாழ்கின்றன. தமிழிலும் இந் நிலையே உள்ளது.

**தொடரும்...**



# அறம் தலை பிரியா ஆறு!

பண்டைய மக்களின் காலக்கண்ணாடி நம் இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்க்கை நிலை, நாகரீகம், பண்பாடு அக வாழ்க்கை, புறவாழ்க்கை பற்றி அறிய கருவூலமாகத் திகழ்கின்றவைகளை யாரும் விரும்பிப்படிப்பதில்லை அவ்விலக்கியங் களின் அருமை பெருமைகளை உணர மறுக்கின் றனர். ஒருசிலராவது படித்துப்பயன் பெறுவர் என்ற நம்பிக்கையில் ஒரு சில இலக்கியக் காட்சிகளை எடுத்து இயம்ப விழைந்தேன். அவற்றில் சில உங்களுக்கு அறிமுகம் செய்யவே கலித்தொகையில் ஒரு காட்சி.

அழகிய ஓர் இளம்பெண் இளைஞன் ஒருவனைக் காதலித்தாள். அவனும் அவளைக் காதலித்தான். ஆனால் அவர் காதலை அப் பெண்ணின் பெற்றோர் ஏற்றுக் கொண்டிலர். அதனால் ஒருநாள் அவர்கள் இருவரும் யாரும் அறியாவண்ணம் எங்கோ சென்று விட்டனர்: தாய் அவளைத் தேடிப் புறப்பட்டாள்: வழியில் வந்த அறிஞர் சிலர், 'தாயே! உன் மகளையும், அவள் காதலனையும் வழியில் கண்டோம்: அவர் போக்கில் தவறு இல்லை என்பது மட்டுமன்று: அதுவே உலகியல் முறையாம் என உணர்ந்து அவரைப் போக விடுத்து வந்தோம். ஆகவே அவர் குறித்துக் கவலைப்படாது. திரும்பி வீட்டிற்குச் செல்வாயாக என்றது இது.

எறித்தரு கதிர் தாங்கி ஏந்திய குடைநீழல்,

உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்

நெறிப்படச் சுவல் அசை, வேறுஒரா நெஞ்சத்துக்

குறிப்பு ஏவல் செயல்மாலைக் கொளை, நடை அந்தணீர்!

செவ்விடைச் செலல் மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை

என்மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்

தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்:

அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!

காணோம் அல்லேம்: கண்டனம் கடத்திடை:

ஆண்எழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய

மாண்இழை மடவரல் தாயிர் நீர் போறீர்?

பலவுறு நறும்சாந்தம், படுப்பவர்க்கு அல்லதை

மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என்செய்யும்?

நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை

நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?

தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே,

ஏம்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை

யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?

சுழுங்கால், தும்மகள், நுமக்கும், ஆங்கு அனையளே, எனவாங்கு.

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்:

சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்:

அறந்தலை பிரியா ஆறும் மற்று அதுவே"

தாய்: அந்தணப்பெருமக்களே! காயும் ஞாயிற்றின் கதிர்களைத் தான் தாங்கிக் கொள்ளும் குடையின் நிழலில், உறியில் தொங்கும் தண்ணீர்க்க மண்டலத்தையும் அரி, அயன், அரண் என்ற மூவரும் ஒருவரே என்பதை உலகுக்குக் காட்டும் முத்தலைக் கோலையும் தோளில் சுமந்து, நன்மையல்லது தீய நினைவுகளை நினைந்து அறியா நெஞ்சுடைமையால் ஐம்பொறிகளும் தாம் விரும்புமாறு சென்று அலையாமல், நீ ஏவிய வழி நடப்பதை முறையாகவும், ஒழுக்கமாகவும் பெற்று, வெப்பம் மிக்க இக்காட்டு வாழ்க்கையைக் கடமையாகக் கொண்ட பெரியோர்களே! என் மகள் ஒருத்தியும் வேறு ஒருத்தியின் மகனும் பண்டு தமக்குத் தாமே காதல் கொண்டனர். அது இன்று பலராலும் அறிந்து கொள்ளப்பட்டது. அதனால் அவர்கள் இருவரும் ஒருமனப்பட்டு இக்காட்டு வழியே வந்து விட்டனர்: அவர்களைத் தாங்கள் கடந்து வந்த காட்டு வழியில் எங்கேனும் கண்டீர்களோ? கண்டீராயின் கண்ட விதத்தையான் அறியக் கூறுங்கள்.

அந்தணர்: ஆணழகனாகிய அச்சிறந்தானோடு, கடத்தற்கரிய இக்காட்டு வழியில் செல்லத் துணிந்த, நற் குணத்தைச் சிறந்த அணியாகக் கருதிய வாய்ந்த தாயே! நீ கூறிய அவ்விருவரையும் காட்டு வழியில் பார்க்காதிருக்கவில்லை: பார்த்தோம்.

தாயே! பற்பல வகையிலும் பயன்படுத்தப்படும் நறுமணம் மிக்க சந்தனக் கட்டை மலையில் தான் வளர்கிறது. ஆனால், அது அங்கு வளர்ந்தாலும், பயன்படுவதல்லது, பிறந்த மலைக்கு எந்த வகையிலும் பயன்படுவதில்லை. நினைத்துப் பார்த்தால் உன் மகளுக்கும் உனக்கும் உள்ள உறவு அத்தகையதே.

தாயே! தலைசிறந்த வெண்முத்துக்கள் கடல் நீரில் தான் பிறக்கின்றன. ஆனால், அவை அங்கே பிறப்பினும் அவை, தம்மை ஆரம் ஆக்கி அணிந்து கொள்பவர்க்கு அழகு தருவதல்லது, தாம் பிறந்த கடலுக்கு எந்த வகையிலும் அழகு தருவதில்லை. ஆராய்ந்து, பார்த்தால், உன் மகளுக்கும் உனக்கும் உள்ள உறவும் அத்தகையதே.

தாயே! ஏழுவகையாக எழும் இனிய இசை, யாழில் தான் தோன்றுகிறது. ஆனால், அது தன்னைக் கேட்டு நுகர்வார்க்கு இன்பம் தருவதல்லது, தான் தோன்றிய யாழிற்கு எந்த வகையிலும் இன்பம் தருவதில்லை, ஆராய்ந்து நோக்கினால் உன் மகளுக்கும் உனக்கும் உள்ள உறவும் அத்தகையதே.

ஆகவே, தாயே! சிறந்த கற்பு நெறியை மேற்கொண்டவளாய்க் காதலனோடு காட்டு வழியில் போய்விட்ட உன் மகள் குறித்து வருந்தாதே? அவள் தலைசிறந்த ஒருவனைத் தன் கணவனாக ஏற்றுச் சென்றுள்ளாள்: அது மட்டுமன்று? அவள் செயல் உலகியல் அறத்தோடு ஒட்டியதும் ஆகும், என்று அந்த தாய்க்கு அறிவுரை கூறி அனுப்பினர்.

**புலவர் ஏழுமலை**

◆













# சென்னை பெசன்ட் நகர் அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தின் 42ஆம் ஆண்டு திருவிழா

சென்னை பெசன்ட் நகரில் இருக்கும் அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்தின் 42ஆம் ஆண்டு திருவிழா நடந்து வருவதையொட்டி இத்திருத் தலத்தின் அதிபரும் பங்கத்தந்தையுமான அருட்பணி பி.கே. பிரான்ஸிஸ் சேவியர் அவர் களிடம் அன்னையின் சிறப்புகள் பற்றிக் கேட்ட போது, அனைத்து விபரங்களையும் நமக்குத்தந்தார்.

**தாய் தெய்வ வழிபாடு**

நம் தாய் திருநாடாம் இந்தியநாடு கடவுள் நம்பிக்கையிலும், கடவுள் பக்தியிலும் சிறந்து விளங்கும் புண்ணிய பூமி என்பது உலகறிந்த செய்தியாகும். கடவுளை தாயாக பாவித்து தெய்வ வழிபாடு செய்வது இந்தியப் பண்பாடு. தாய் நாடு, பூமாதேவி என்றெல்லாம் நிலத்தை தாயாகப் பாவித்து வழிபடுகின்றனர். நதியையும், மழையையும் இயற்கையையும், அன்னை வடிவில் தரிசித்து கடவுளின் அருளை வேண்டுகின்றனர். இது நம் மக்களின் ஆன்மீக எழுச்சியையும் வளத்தையும் தெளிவுப்படுத்துகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தாய்தெய்வங் களுக்காக பல்வேறு கோவில்கள் இருந்தாலும் குறிப்பிட்ட மக்களே அக்கோவில்களுக்குச் செல்கின்றனர். ஆனால் ஆரோக்கிய அன்னை எனப் போற்றப்படும் மரியன்னையின் ஆலயங்களுக்கு இன மத வேறுபாடு இன்றி அனைத்து மக்களுமே சென்று வருகின்றனர். ஆரோக்கிய அன்னையின் புகழ் பரப்பும்

பல திருத்தலங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது சென்னை, பெசன்ட் நகர், அன்னை வேளாங்கண்ணி திருத்தலம் ஆகும்.

**திருத்தலத் தோற்றம்**

சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தின் குருவாகப் பணியாற்றியவர் அருட்தந்தை. பி. டி. அருளப்பா அவர்கள். ஒருநாள் இறைவனின் தாயாம் அன்னை மரியாள் பி.டி. அருளப்பா அடிகளாரின் கனவில் தோன்றி தனக்காக இங்கே ஒரு ஆலயம் எழுப்பும்படி பணித்தார். எனவே ஓடைமாநகர் என்று அழைக்கப்படும் மீனவர் குடியிருப்பில் மிரியன்னைக்கு ஆலயம் எழுப்பும் பணி தொடங்கியது. (இப்பகுதி இப்போது எலியட்ஸ் கடற்கரை என்று வழங்கப்படுகிறது).

1971ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாள் ஆரோக்கிய அன்னைக்கு குடிசைக் கோவில் எழுப்பப்பட்டது. 1972 ஜூன் 24 அன்று பேராயர் டாக்டர். ஆர். அருளப்பா ஆண்டகை அவர்களால் திருத்தலம் மந்திரித்துத் திறக்கப்பட்டது. ஜூலை 15 ஆம் நாள் அருட்தந்தை பி.டி. அருளப்பா அவர்களால் முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

**திருத்தல வளர்ச்சி**

1972 செப்டம்பர் மாதம் 8ஆம் நாள் திருத்தலத்தின் முதல் ஆண்டு நிறைவுவிழா கொண் டாடப்பட்டது. இவ்வாண்டு, 42ஆம் ஆண்டு திருவிழா நடைபெறுகிறது.

திருத்தலப் பீடத்தில் எழுந்தருளியிருக்கும் சக்தி மிக்க ஆரோக்கிய அன்னையின் திருசுரூபத்தை கேரள நாட்டில், குட்ட நாடு பகுதியிலுள்ள சேம்பக்குளத்தைச் சேர்ந்த சிற்பி திரு.கே.கே. சாக்கோ அவர்கள் உருவாக்கினார்.

1972 ஆகஸ்ட் 27 அன்று திருத்தலத்தின் மணிக் கூண்டு திறந்து வைக்கப்பட்டது. அன்றைய தமிழக முதலமைச்சர் திரு.மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன் உச்சியிலுள்ள சிவப்பு விளக்கு வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் இப்பகுதி மீனவர்களுக்கு கலங்கரை விளக்காக ஒளி தருகிறது.

நாள்தோறும் பெருகிவந்த பக்தர்களின் எண்ணிக்கையால் திருத்தல ஆலயத்தில் இட நெருக்கடி ஏற்பட்டது. எனவே 1985ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று சிற்றாலயத்திற்கு எதிரே புதிய ஆலயம் எழுப்பப்பட்டது. 1994 ஆம் ஆண்டு சிற்றாலயம் புதுப்பிக்கப்பட்டது.

1995 செப்டம்பர் 7ஆம் நாள் அருங்காட்சியகம், பக்தி பொருட்கள் விற்பனைக்கூடம், புத்தக நிலையம் ஆகியவை அடங்கிய புதிய கட்டிடம் திறக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் நாள் அருட்தந்தை பி.டி.அருளப்பா நினைவு சமூகக்கூடம் திறக்கப்பட்டது. திருமணம், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு இவ்விடம் பயன் படுகிறது.

ஆலய வளாகத்தில் விழா மேடையும், ஜெபமாலை தேவஇரகசிய தலங்களும் திறந்து வைக்கப்பட்டன.

நற்கருணை நாதர் தியான மண்டபம் திறக்கப் பட்டது. புதிய மாதா கெபி திறக்கப்பட்டது. மக்கள் தியானம் செய்து ஜெபிக்க இது மிகவும் உதவியாக உள்ளன.

மரியன்னையின் சதுக்கமும், ஒப்புறவு அருட் சாதன சிற்றாலயமும் திறக்கப்பட்டது.

'Administrative block' 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புதிதாக கட்டி திறக்கப்பட்டது.

'பொருட்காட்சியகம்' புதுப்பிக்கப்பட்டு 2008ல் திறக்கப்பட்டது.

29082012 75அடி உயரமுள்ள வெண்கல கொடிமரம் கட்டப்பட்டது.

**திருத்தல சமூகப்பணிகள்**

அன்னையின் புதுமைகளுக்கு சாட்சி பகரும் பொருட்காட்சி மையம் தினமும் ஆயிரக்கணக் கான பக்தர்களுக்கு அன்னையின் புதுமைகளைப் பறை சாற்றுகிறது.

1982 முதல் "அன்னை வேளாங்கண்ணி" என்னும் பல்சுவை மாத இதழ் திருத்தலத்தி லிருந்து ஏறக்குறைய இப்போது 5000 பதிப்புகள் வெளி வருகின்றன.

அன்னை வேளாங்கண்ணி "திருமணத்தகவல் நிலையம்" நூற்றுக்கணக்கானவர்களுக்கு வாழ்க் கைத் துணையைத் தேடி தருகின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னை வேளாங்கண்ணி தையல் பயிற்சி நிலையம் பல ஏழைப் பெண்கள் தையல் தொழில் கற்று, வாழ்க்கையில் உயரத் துணை செய்கிறது.

மரியாயின் சேனை, மாதா சபை, அன்பியங்கள், பீடச்சிறுவர் சிறுமியர் அணி, இளைஞர்கள் சங்கம் (ஆண்கள், பெண்கள்) கத்தோலிக்கத் தொழிலாளர் இயக்கம், கார்மெல் சபை, ஒளிஉதய அருட் சகோத ரிகள் போன்ற அமைப்புகள் திருத்தல வளர்ச்சிப் பணியிலும் பல சமூக சேவைகளிலும் சேவை புரிகின்றனர்.

ஒவ்வொரு பெரிய வெள்ளிக்கிழமையன்றும், திருவிழா நவநாட்களில் வரும் தேவநற்கருணை விழா அன்றும், திருத்தலத்தில் நடைபெறும் இரத்த தான முகாமில் பங்கேற்று நூற்றுக்கணக் கானவர்கள் இரத்ததானம் செய்து பல உயிரைக் காத்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 05.00 மணி முதல் 07.00 மணி வரை இலவச சட்டஉதவி மையம் செயல்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் ஏழை எளிய பள்ளிப்பிள்ளைகளுக்கு, 'கல்வி நிதிஉதவி வழங்கி' .. படிக்க ஊக்குவிக்கின்றோம்.

ஒவ்வொரு நாளும் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை, வீட்டில் படிக்க போதிய விளக்கு, இடம் இல்லாத ஏழைப்பிள்ளைகள் ஆலய வளாகத்தில், அவர்களுக்கு என்று அமைக்கப் பட்டுள்ள இடத் தில் படிக்க வசதியும், கண்காணிக்க, புரியாத பாடங்களைக் கற்றுக் கொடுக்க, இரண்டு ஆசிரியர் களை நியமித்து உள்ளோம். ஏறக்குறைய 100 பிள்ளைகள் படித்துப் பயன் பெறுகின்றனர்.

கல்லூரியில் படிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு நிதிஉதவி வழங்குகிறோம்.

நோயுற்றோர் நலம் பெற, கைவிடப்பட்டோர் ஆறுதல் பெற சிறப்பாக செபஉதவி தருகின் றோம். சிறப்புச் செபக்குழு அமைத்து, செபித்து வருகிறோம்.

ஆண்டிற்கு ஒருமுறை, கண் சிகிச்சை முகாம், இலவச நோய் பரிசோதனை முகாம், இரத்ததான முகாம் (இரண்டுமுறை) நடைபெறுகின்றன.

ஏழைகளுக்கு உணவளித்தல், பணஉதவி செய்தல் போன்றவை நாள்தோறும் நடைபெறு கின்றன.

சென்ற ஆண்டு சிறப்பாக ஆகஸ்டு 29ஆம் தேதி புதிதாக அமைக்கப்பட்டுள்ள 75அடி உயரமுள்ள வெண்கலக் கொடிமரம் அர்ச்சிக்கப் பட்டது. அத்தோடு இந்த ஆண்டு 12அடி நீளம், 8அடி உயரமுள்ள புதிய கொடி ஏற்றப்பட்டி ருக்கின்றது.

ஆரோக்கிய அன்னை குழந்தை இயேசுவுக் காக பால் கேட்டு, பிறகு பால்குடம் தாமாக நிரம்பிவழிந்த புதுமையைச் சித்தரிக்கும் மாதா கெபியானது இம்மாதம் 18ஆம் தேதி நம் பாசமிகு பேராயர் மேதகு. ஜார்ஜ் அந்தோணி சாமி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அன்னையின் அருளைப் பெற மக்கள் பெருமளவில் வந்து, அன்னையைத் தரிசித்து மனநிறைவுடன் திரும்பிச்செல்கின்றனர். அன்னை யின் அற்புதங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது என்றார் திருத்தல அதிபர் அருட்பணி. பி. கே. பிரான்ஸிஸ் சேவியர். அருட்பணி. அமல்ராஜ் அவர்களும் அருட்பணி. சேசு அருள்பிரகாசம் அவர்களும் உடனிருந் தனர்.

**உமா மகேஸ்வரி.**

# எல்லாம் தலைகீழாய்

ஒருவீடும் இல்லாத பரம ஏழை
உளம் நிறைவாய் வாடகைவீட் டில் வாழ்கின்றனார்,
இரண்டடுக்கு மாளிகையைக் கட்டி உள்ளோர்
இன்னுமொரு வீடுகட்ட விரும்பு கின்றார்,
வருமானம் ஆயிரங்கள் ஐந்தைக் கொண்டார்
வாழ்வினில் மனநிறைவாய் வாழு கின்றார்,
ஒருதிங்கள் ஐம்பதாயி ரங்க ளுள்ளோர்
உளநிறைவே இன்றிநாளும் வாடு கின்றார்.

படிக்காத தொழிலாளி படிப்பு பற்றிப்
பலகாலம் வருந்துவதும் இல்லை இங்கு,
படித்திட்ட பட்டதாரி மேலு மிங்குப்
படித்திடவே தன்வாழ்வில் விரும்பல் உண்டே,
உடுத்திடவே இரண்டுமட்டும் உள்ளபோதும்
உளம்வருந்தா மனிதர்கள் மண்ணில் உண்டே,
அடுக்கிவைக்க இருபத்தாம் உடையி ருந்தும்
அலைகின்றார் புதுவுடைக்கு மண்ணில் உண்டே.

கஞ்சியினைக் குடிக்கின்ற ஏழை மக்கள்
கழனிகளில் உழைக்கின்றார் சோம்பல் இன்றி,
பஞ்சுமெத்தை பல்சுவையாய் உணவும் உள்ளார்
பலநேரம் களைப்புடனே இருத்தல் உண்டே,
அஞ்சுவதே இல்லைபெருந் துன்பம் செய்யும்
அன்பில்லா மாந்தர்கள் எந்த நாளும்
அஞ்சுகின்றார் சிறுதுன்பம் செய்து விட்டே
அன்புடைமை கொண்டிட்ட ஈர நெஞ்சர்.

இல்லாதார் வருமானம் பெருக்க வென்றே
ஏற்றமிகு முயற்சிகளைச் செய்வ தில்லை,
எல்லையிலாச் சொத்துக்கள் கொண்ட பல்லோர்
இன்மேலும் பொருள்சேர்க்க அலைதல் உண்டே,
எல்லாமே தலைகீழாய் நடத்தல் இங்கே
எந்நாளும் காணுகின்ற நிலைமை தானே,
பல்லோரும் காரணங்கள் அறியா திங்கே
பாழாகக் காலத்தைக் கழித்தல் ஏனோ?

**கவிஞர். இராம. பரஞ்சோதி**

சிறுகதை இருங்கோவேள்

# மயிரின் மதிப்பு?



அஷ்டலட்சுமி அவள் பெயர். அவளது பெற்றோருக்கு ஒரே மகள். அவளது குடும்பம் ஆச்சார மானது. அஷ்டலட்சுமியும் அப்படித்தான் இருந்து வந்தாள் வீட்டில் மட்டும். வீட்டைவிட்டு வெளியேறி விட்டால், அவளுக்கு அரைக்கால் சட்டை போட வேண்டும் என்று ஆசை வரும். தனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இந்த இடத்தில் இல்லை என்று அவளுக்கு உறுதியாகத் தெரிந்து விட்டால் உள்ளாடைகளோடு உலா போக வேண்டும் என்று எண்ணம் கொள்ளுவாள்.

அவள் எண்ணத்திற்கேற்றவாற பல முறை நடந்து கொண்டிருக்கிறாள். ஓரிருமுறை அவளைப் பற்றித் தகவல் கேள்விப்பட்ட போதிலும்கூட, அந்த ஆச்சாரமான அம்மா, அப்பா கூறிய அறிவுரை அவள் செயலை வரவேற்பதாகவே இருந்தது. அதிலும் அவளது அப்பன் என்று சொல்லிக் கொள்பவன் தன் மகளிடம் “நீ எப்படி வேண்டு மானாலும் இரு. ஆனால் தெரிந்தவர்கள் இருக்கும் போது ஆச்சாரத்தைக் கடைபிடிப்பது போல் நடந்து கொள்“ என்றதுதான் அவளுக்கு இன்னும் இனிப்பாக இருந்தது.

கல்லூரிப்படிப்பை முடித்தாள். படிப்புக் காலத்தில் பலபேரின் பணத்தை, அன்பளிப்பு, பரிசுப்பொருட்கள் என்ற வகையில் பறித்தாள். கொஞ்சுவாள், கட்டிப் பிடிப்பாள், யாரும் இல்லாத நேரத்தில் எதுவும் செய்வாள். காசில்லை, அவனால் தனக்கு எதுவும் உபயோகம் இல்லை என்றால் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாள். பல இளைஞர் களுக்கு இவள் பெயரைக் கேட்டாலே வேப்பங் காயாகக் கசக்கும். ஆனால் அஷ்டலட்சுமியோ தன் இஷ்டம் போல் அலைந்தாள். ஆண்கள் பலரை அவளுக்கு அடிமையாக்கி னாள். ஆனந்தமாக வாழ்வதாக நினைத்துக் கொண்டு அநாகரிக வாழ்க்கை வாழ்ந்தாள்.

தலையில் சுருட்டைமுடி உள்ள இளைஞர் களைக் கண்டால், அஷ்டலட்சுமி தானாகச் சென்று பேசுவாள். அப்படிப்பட்டவர் களோடு அதிகநாள் தொடர்பில் இருப்பாள். அதே போல் வேறொரு சுருட்டை முடிக்காரனைப் பார்த்துப் பழகிவிட்டால் முதலாமவனை கழட்டி விட்டு விடுவாள்.

அஷ்டலட்சுமிக்கு பெற்றோர் வரன் பார்க்க ஆரம்பித்தனர். அவள் சாதி இணையதளங்களில் அவள் முகம் பளிச்சிட, ஒளி ஈர்த்த பூச்சிகளாய் பல மாப்பிள்ளைகள் அவளைப் பெண்பார்க்க வந்தனர். வந்தவர்கள் பலரை இவள் நிராகரித்தாள். சிலரை இவள் சரி என்று சொல்லியும் மாப்பிள்ளை வீட்டார் திரும்பி வரவில்லை. இவளைப்பற்றி விசாரித்தபோது யாரும் திருப்தியாகச் சொல்ல வில்லை என்றாலும் அவள் அழகுக்காக மணக்க முன் வந்தவர்கள் சிலர் அவர்களில் ஒருவன் சீனிவாசன்.

சீனிவாசனுக்கு அவளைப் பிடித்திருந்தது. வீட்டாரும் அஷ்டலட்சுமியின் திருவிளையாடல் களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மகனின் ஆசைக்கு அவனது பெற்றோர் தலைய சைத்தனர். ஆனால் சீனிவாசனின் நெருங்கிய நண்பனான சையது மட்டும் வேண்டவே வேண்டாம், அவளை நீ மணமுடித்தால் நமது நட்பு முறிந்துவிடும் என்றான். சையதுதான் சீனிவாசனுக்கு பல வழிகளிலும் உதவியவன். சீனிவாசன் கொஞ்சம் நன்றி உணர்வு உள்ளவன், எனவே அஷ்டலட் சமியை விட்டுவிட்டான்.

அஷ்டலட்சுமிக்கோ மாப்பிள்ளை அமைந்த பாடில்லை. வயது முப்பது ஆகிவிட்டது என்றாலும் அவளது சமூகமோ பெற்றோர்களோ அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை காரணம்? அது அவர்களுக்கு சாதாரணமானதுதான். மேலும் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின் அஷ்டலட்சுமி யின் பெற்றோர் ஒரு முடிவுக்கு வந்தனர். அவளுக்கு திருமணத்தை எப்படியாவது செய்து வைத்துவிட வேண்டும் என்பதுதான் அது.

அவளது உறவு மாப்பிள்ளைகளோ அவர்கள் சார்ந்த சமூகத்து ஆண்களோ கிடைக்கவில்லை. வேறு ஒரு சமூகத்தில் ஒரு மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தனர். அந்த மாப்பிள்ளைக்கு முன் தலையில் கொஞ்சம் வழுக்கை இருந்தது. அவளுக்கோ அவனை கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவளது அம்மாவோ மகளை அணைத்துக் கொண்டு அறிவுரை சொன்னாள். "நீ கல்யாணம் செய்து கொள். அதன் பிறகு உன் இஷ்டம்போல் இரு" என்று.

அஷ்டலட்சுமிக்கு இது பிடித்திருந்தது. நூலைப்போல சேலையல்லவா? திருமணம் முடிந்தது. அவனுடன் அன்பாக இருப்பது போல நடித்தாள். மோகமே இல்லாமல் வெறும் நடிப்புடன் முப்பதுநாள் முடிவடைந்தது. அஷ்டலட்சுமி அகத்தில் தங்காமல் அலங்கோல வாழ்க்கையைத் தொடர்ந்தாள். மணவாளன் விரக்தியடைந்தான். சொல்லிப்பார்த்தான் கேட்டபாடில்லை.

அமைதி யானான். விரக்தி அடைந்து தற்கொலை செய்து கொள்ளலாம் என்று கூட எண்ணினான். அவனது அப்பா, அம்மா, தங்கைக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவனது தற்கொலை எண்ணத்தை விரட்டிவிட்டுக் கொண் டிருந்தது.

நான்கு திருமண நாட்கள் ஓடிவிட்டன. அவன் தனிமையில் அதை நினைத்துப் புழுங்கிக் கொண்டி ருந்தான். அவளோ ஒவ்வொரு திருமணநாளையும் வெவ்வேறு ஆட்களுடன் கொண்டாடிக் கொண்டி ருந்தாள், முதல் திருமண நாள் போன்று.

மாதத்தில் ஆறு, ஏழு நாட்கள் கணவன் வீட்டிலும் மற்ற நாட்கள் பெற்றோர் வீட்டிலும் இருப்பாள். திருமணம் ஆகி நான்கரை ஆண்டு களுக்குப் பின் ஒரு மாதமாக அவளைக் காண வில்லை. இவன் அதைப்பற்றி கவலை கொள்ளவும் இல்லை. ஒரு நாள் அவளது அப்பா பேசினார். தனது மகளுக்கு கேன்சர் இருக்கிறது என்று மருத்துவர்கள் கூறியதால் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறோம், என்று தகவல் சொன்னார்.

அவள் மேல் வெறுப்பு இருந்தாலும்கூட மருத்துவ மனைக்குச் சென்று பார்த்தான். அவள் அவனை திரும்பிப் பார்க்கவில்லை. கண்கள் மூடியபடி இருந்தாள்.

அதன்பிறகு அவன் மருத்துவமனைக்குச் செல்வதைத் தவிர்த்தான். அங்கிருந்து எந்தச் செய்தியும் இல்லாமல் ஏழு மாதங்கள் கழிந்தன. அவன் அலுவலகம் சென்றபோது இவனை எதிர்நோக்கி வந்த அஷ்டலட்சுமியின் தந்தை, உங்களைத்தான் பார்க்க வந்தேன் என்றார். என்ன விசயம் என்றான். அஷ்டலட்சுமி முழுவதும் குணமாகிவிட்டாள். உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப் படுகிறாள். ஒருமுறை வீட்டிற்கு வந்து செல்லுங்கள் என்று பரிதாபமாக வேண்டினார். சரி வருகிறேன் என்று கூறிவிட்டு அலுவலகம் சென்றான். மாலையில் வேலைநேரம் முடிந்ததும் அஷ்டலட்சுமி யின் வீட்டிற்குச் சென்றான்.

தான் திருமணம் செய்து கொண்ட அழகியா இப்படி மாறிப்போய்விட்டாள்! என்று ஆச்சரியப் பட்டுப் போனான். அவள் மீது வெறுப்பின் உச்சியில் இருந்த அவனுக்கு அவள் மேல் பரிதாபம் ஏற்பட்டது. அவளது தலையில் மருந்துக்குக்கூட ஒரு முடியில்லை. கேன்சருக்காக கொடுக்கப்பட்ட மருந்துகள் அவளது தலைமுடியைத் தின்று தீர்த்திருந்தன.

அவனைப் பார்த்ததும் அவளது கண்கள் நீரருவியாய் மாறிப்போயின. அச்சம் என்பதை அவள் கண்களில் அவன் பார்த்ததில்லை. ஒரு துளி கண்ணீரைக்கூட அவன் கண்டதில்லை. அப்படிப் பட்டவளா இப்படி அழுகிறாள்.

அவனால் நம்ப முடியவில்லை. அவள் அழுகையி னூடே என்னை மன்னித்துவிடுங்கள் என்றாள். நுனிநாக்கு ஆங்கிலத் தில் நர்த்தனமாடும் அவளது நாக்கு மன்னித்து விடுங்கள் என்று தமிழில் கூறியது அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. எப்போதும் தமிழ்தான் தாங்கிப் பிடிக்கக்கூடியது என்பதை அவள் அறிந்து கொண்டாள். அவன் அந்தத் தமிழுக்காக கொஞ்சம் இளகித்தான் போனான்.

அஷ்டலட்சுமி தன் கடந்த கால நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் அவனுக்கு நினைவூட்டி மன்னித்துக் கொள்ளுங்கள் என்றாள். உங்கள் தலையில் முடி அதிகம் இல்லாததால் நான் உங்களை வெறுத்தேன், இன்று என் தலையில் ஒரு முடிகூட இல்லை. காரணம் நான் உங்களுக்கு எதிராக நடந்து கொண்டதும் உங்கள் மனதைப் புண்படுத்தியதும் தான் என்றாள். அவன் வந்ததில் இருந்து அவள் அழுது கொண்டேதான் பேசினாள். அவன் மிகுந்த வேதனையோடு நான் வருகிறேன் என்றான். அவள் அவனது கரங்களைப் பிடித்தாள். நான் உங்களுடன் வரலாமா? என்றாள். வா என்று தலையசைத்தான். அஷ்டலட்சுமி உள்ளே சென்றாள். உடை மாற்றினாள், அவனுடன் சென்றாள், தலையில் எதுவும் போடாமலே. பக்கத்தில் உள்ளவர்கள் அப்போதுதான் அவளைப் பார்த்தார்கள். அவளா இவள் என்று தொடங்கி ஆளாளுக்கு வெவ்வேறு விதமாகப் பேசிக்கொண்டார்கள்.

அவன் அஷ்டலட்சுமியுடன் வீடு வந்த சேர்ந்தான். வீட்டில் அவனது அப்பாவும் அம்மா வும் அவளைப்பார்த்து விக்கித்து நின்றார் கள். அவள் அவர்களது காலில் விழுந்து கண்ணீர் பெருக்கினாள். அவனது தாய் அவளைத் தூக்கி நிறுத்தினாள். மகனிடம் உள்ளே கூட்டிட்டுப் போப்பா என்றார்கள். உள்ளே போய் இருவரும் பேசினர்.

அவனது தங்கை திருமணமாகி போய் விட்ட செய்தி அப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. அவனது தாயார் உணவு கொண்டு வந்து கொடுத்தார்கள். அஷ்டலட்சுமி அவனுக்கு ஊட்டினாள். அவனது கணகள் நனைந்தன. அவள் மனம் சொன்னது. இன்றுதான் உனது உண்மை யான மணநாள் என்று. அன்று தொடங்கிய அவர் களது திருமண வாழ்க்கை இரு மகவுகளோடு இன்பமாய்த் தொடர்கிறது.

◆

# செவியுள்ளோர்! கேட்கக் கடவர்!

கவிஞர் ஜெயபாஸ்கரன்

மதுவை விற்பனை செய்வதில் தமிழகம் இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது. மதுவை நுகர்வதில் தமிழர்கள் உலக அளவில் முதலிடம் வகிக்கிறார் கள். இப்படியொரு மதுப்புரட்சியை தமிழ்நாடு இது வரை சந்தித்ததில்லை.

வேண்டும் என்று கேட்டு அரசின் முன்பாக மக்கள் ஆங்காங்கே முன் வைக்கின்ற பல்வேறு கோரிக்கைகள் கிடப்பில் போடப்படுகின்றன. ஆனால், வேண்டாம் என்று ஆங்காங்கே மக்களே ஒன்று கூடி போராடித் தடுக்கின்ற அளவுக்கு மதுக்கடைகள் மட்டும் அரசினால் வேக வேகமாகத் திறக்கப்பட்டு வருகின்றன.

மது வேண்டும் என்று கேட்டு, ஒரே ஒரு குடிகாரன் கூட கோரிக்கை வைக்காத நிலையில் தானாகவே முன்வந்து திட்டமிட்டுச் செயல்பட்டு மதுவிற்பனையில் அரசு மிகப் பெரிய வருவாயை பெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் எட்டுக்கும் மேற்பட்ட மிகப்பெரிய மது உற்பத்தி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வளவு ஆலைகளும் தனி யாருக்கு அதாவது தனிப்பெரும் முதலாளிகளுக்குச் சொந்தமானவை.

அப்படியான ஆலைகளில் இருந்து கோடிக் கணக்கில் தேவைக்கேற்ப அவ்வப்போது கொள் முதல் செய்கிற மதுப்புட்டிகளைத்தான் தமிழக அரசு தனது 6,800க்கும் மேற்பட்ட டாஸ்மாக் கடைகளின் வாயிலாக விற்பனை செய்துவருகிறது.

மிகப் பெரும்பாலான டாஸ்மாக் கடைகள் உறுதியான இரும்பு வேலிகளால் பாதுகாக்கப் பட்டுள்ளன. அத்தகைய இரும்பு



வேலிகளின் மிகச்சிறிய சந்துகளின் வழியாகத்தான் அரசுக்கு ஓர் ஆண்டுக்கு 22,000 கோடிக்கு மேல் வருவாய் வந்து கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் நட்சத்திர விடுதிகள் மட்டும் அரசிடம் அனுமதி பெற்று மதுக்குடிப்பகங்களை (பார்) நடத்தி வந்தன. அரசு மதுவிற்பனையை நேரடியாகக் கையிலெடுத்த பிறகு இந்த நிலை மாறிவிட்டது. ஒரு புதிய நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

ஒரு தங்கும் விடுதியில் 40 அறைகளுடன் ஓர் உணவுக்கூடமும் இருக்குமானால் அந்த விடுதி யானது அரசுக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதி பெற்று குடிப்பகங்களை நடத்திக் கொள்ளலாம் என்பதே அந்த நடைமுறை. அந்த குடிப்பகங்களுக்குத் தேவையான மது வகைகளை அரசு டாஸ்மாக் நிறுவனத்தின் மொத்த விற்பனை மையத்தில்தான் கொள்முதல் செய்துகொள்ள வேண்டும்.

இந்த வகையில் இன்றைக்குத் தமிழகத்தில் சுமார் 1000க்கும் மேற்பட்ட நடுத்தர விடுதிகளில் சொகு சான குடிப்பகங்கள் தோன்றி பல லட்சக்கணக் கான நடுத்தர வருவாய்ப் பிரிவினரை குறிப்பாக இளைஞர்களை வளைத்துக் கொண்டன.

இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், தில்லி ஆகிய மூன்று மாநிலங்களில் தான் மதுவிற்பனையை அரசுகளே நேரடியாகச் செய்து வருகின்றன. கேரள அரசு குடிப்பகங்களை மூட உத்தரவிட்டுள்ளது.

படிப்படியாக முழு மதுவிலக்கை அமல்படுத்தப் போவதாக அந்த மாநில முதல்வர் அறிவித்திருக்கி றார். குஜராத், மிசோரம், நாகாலந்து ஆகிய மூன்று மாநிலங்களில் மதுவிலக்கு நடைமுறையில் உள்ளது.

மற்ற மாநிலங்களில் மதுவிற்பனை வணிகம் அரசுகளின் கைகளில் இல்லாமல் அவற்றின் கண் காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் உள்ளன. தமிழ்நாடு தான் இவ்வணிகத்தில் தலைகீழாக மாறியி ருக்கிறது. மதுவை அரசாங்கமே விற்பது என்பது, ஆட்சியறத்துக்கு எதிரானது என்று நமது முன்னாள் இந்நாள் அரசுகள் நினைக்கவில்லை.

ஒரு படி மேலே சென்று மது விற்பனையை அரசாங்கமே வரிந்து கட்டிக் கொண்டு ஊக்கு வித்துக் கொண்டிருக்கிறது. அனைத்து டாஸ்மாக் மதுக்கடைகளிலும், அதிகபட்சவிலை என்று அச்சடிக்கப்பட்டிருக்கும் விலைக்கும் கூடுதலாக ஐந்து அல்லது பத்து ரூபாய் சேர்த்தே அனைத்து மது வகைகளும் விற்கப்படுகின்றன.

எந்தக் குடிமகனும் அதை எதிர்த்து எதுவும் கேட்பதில்லை. அப்படிக் கேட்டால் அவன் விரட்டப்படுவான். பின்னர் ஒவ்வொரு கடையிலும் அப்படியான அந்த ஐந்தும் பத்தும் லட்சங்களாகச் சேர்ந்து பின்னர் பல ஆயிரங்களாகப் பிரிந்து ஆங்காங்கே செல்வதாகவும் சொல்கிறார்கள்.

மேலும் எந்த ஆலையின் எந்த மதுவை அதிக மாக விற்பனை செய்ய விரும்புகிறார்களோ அந்த விருப்பம்தான் ஒவ்வொரு டாஸ்மாக் கடையிலும் வலுக்கட்டாயமாக அரங்கேறுகிறது. அதுமட்டு மின்றி போலி மதுவகைகள் மது புட்டிகளோடு கலக்கப்படுவதா கவும் அடிக்கடி குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. கொள்முதல், விற்பனை, தரம் போன்ற எதிலும் வெளிப்படைத் தன்மை இல்லை.

2003 ஆம் ஆண்டு மதுவிற்பனையை அரசு ஏற்றது முதல் விபத்துக்களின் எண்ணிக்கையும் அவற்றின் விளைவான உயிரிழப்புகள் மற்றும் உடலுறுப்பு இழப்புகளின் எண்ணிக்கையும் தாறுமாறாக எகிறிக் கொண்டிருக்கின்றன.

கடந்த 1993ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்தில் தமிழ் நாட்டில் வாகன விபத்துகளில் மொத்தம் 90,000 பேர் இறந்துள்ளனர்.

2003 முதல் 2013 வரையிலான பதினொரு ஆண்டுகளில் இறந்தவர்களின் எண்ணிக்கையோ 1,40,686 பேர். இது மரண விபத்துக் கணக்கு மட்டுமே. காயம், படுகாயம் மற்றும் காயங்கள் ஏற்படுத்தாத விபத்து ஆகியவை இதில் சேர்க்கப் படவில்லை.

இப்படியான உயிர்ப்பலிகளின் உயர்வுக்குச் சாலைகள், ஓட்டுநர்கள் மற்றும் வாகனப் பெருக்கம் இவையெல்லாவற்றையும் விட மதுவே முக்கியக் காரணம்.

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்தில் இருக்கும் மாடப்பள்ளி எனும் ஊராட்சியில் மட்டும் மதுவுக்குக் கணவனைப் பறிகொடுத்த நூற்று ஐம்பது இளம் விதவைகள் உள்ளனர்.

தமிழ்நாட்டின் அனைத்து ஊராட்சிகள்

மற்றும் நகராட்சிகளில் மதுவுக்குக் கணவனைப் பறிகொடுத்து விட்டு குழந்தைகளோடு வாழ்விழந்து நிர்க்கதியாகி நிற்கும் இளம் விதவைகள் ஏராள மானோர் உள்ளனர்.

மது மிகவும் எளிதாகக் கிடைக்கத் தொடங்கிய கடந்த பத்து ஆண்டுகளில், இடையறாத தொடர்ச் சியான மதுப்பழக்கத்திற்கு ஆளாகி இறந்துவிட்ட இளம் மற்றும் நடுத்தர வயதினரின் இளம் விதவை மனைவியர் தமிழகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கில் இருப்பர்.

தற்போது மிகவும் அதிகமாகத் தென்படுகிற கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகளில் மிகப் பெரும் பாலானவை மது மற்றும் அதன் விளைவான சுவரொட்டிகளேயாகும்.

போலி மதுவைத் தடுப்பதற்காகவும் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கும்தான் மது விற்பனையை அரசே நடத்துகிறது என்றால், அண்மைக் காலமாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மதுப் பழக்கத்திற்கு அறிமுகமாகி இருப்பது ஏன்? அரசு மது விற்பனையை மேற்கொள்ளாமல் இருந்தி ருந்தால் இவர்கள் அனைவரும் கள்ளச் சாராயத் தையும் போலி மதுவையும் தேடிப்போயிருப் பார்களா என்ன?

திருவாரூர் அருகில் 9ஆம் வகுப்பு மாணவன் ஒருவன் பீர் புட்டியை, பள்ளிச் சீருடைக்குள் மறைத்துச் செருகிக் கொண்டு மிதிவண்டியில் கரடுமுரடான சாலையில் போய்க்கொண்டிருந்த போது அந்தப் புட்டி வெடித்து உடைய, அதன் கண்ணாடி அவன் வயிற்றைக் கிழித்து அவன் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே துடிதுடித்து இறந்துபோனான். மாணவர் களிடையே ஏற்பட்டிருக்கிற மதுக்கலாசாரத்திற்கு இது ஒரு சான்று.

தமிழக அளவில் எங்கு ஒரு அசம்பாவிதம் நடந்தாலும் அதுதொடர்பான எச்சரிக்கைகளும், விசாரணைகளும், விழிப்புணர்வு நடவடிக்கைளும் தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்படியான நடவடிக்கைகள் ஒரு கண் துடைப்பாக நடந்து மீண்டும் பழைய படி அத்தகைய அசம்பாவிதங்கள் நடந்து கொண்டுதான் இருக் கின்றன என்றாலும் அது போன்றதொரு கண் துடைப்பு நடவடிக்கைகூட மது தொடர்பான அவலங்களின் பொருட்டு ஏனோ மேற்கொள்ளப் படுவதில்லை.

பெரும்பாலான தமிழ்த்திரைப்படங்கள் மது அருந்தும் கலாச்சாரத்தை ஓர் இயல்பான செயலாக பரப்பிக் கொண்டிருக்கின்றன. அக்காட்சிகள் வீட்டுக்குள் இருக்கிற தொலைக்காட்சிகளிலும் அடிக்கடி ஒளிபரப்பில் இடம் பெற்று, மது என்பது இயல்பான ஒரு தேவை எனும் ஒரு கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

பணக்காரர்கள், நட்சத்திர மற்றும் தனியார் விடுதிகளில் குடிக்கிறார்கள். எல்லோருமே குடிக்கத்தான் செய்கிறார்கள். அவையெல்லா வற்றையும்விட நமது அரசாங்கமே மதுவை விற்பனை செய்கிறது.

மேலும் புதிய புதிய மதுக்கடைகளைத் திறந்து இலக்கு வைத்து விற்பனை செய்கிறது என்பன போன்று நடைமுறையில் இருக்கும் இன்னும் பல காரணங்களால் தான் நமது தமிழ்நாடு மதுமயக்க மாநிலமாக மாறி சமூக பொருளாதார மனிதவள, உற்பத்தி மற்றும் பண்பாட்டுக் கூறுகளில் மிகப்பெரிய அளவிலான பின்னடைவைச் சந்தித்தபடியே சரிந்து கொண்டிருக்கிறது.

இந்நிலை இப்படியே தொடர்ந்தால் தமிழர் களின் எதிர்கால நலமும் வளமும் கேள்விக்கும், கேலிக்கும் உரியதாக மாறிவிடும் என்பது உறுதி.

குழந்தைகளின் கைகளுக்கு எளிதில் எட்டுகிற உயரத்தில் கண்ணாடிப் பொருள்களை வைக்கக் கூடாது என்பதை மது விற்பனை விஷயத்தில் அரசு உணராமல் இருப்பது ஏனோ?

குழப்பழக்கத்திற்கு ஆளாகிப்போன தந்தை களாலும், கணவர்களாலும், சகோதரர்களாலும், காதலர்களாலும், பிற ஆண் உறவுகளாலும் மிகப்பெரிய அளவில் உளவியல் பாதிப்புகளையும் உடற்காயங்களையும் அடைந்து இன்றைக்குக் கோடிக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் எழுப்பிக்கொண்டிருக்கும் அவலக்குரலை செவி யுள்ளோர் கேட்கக்கடவர்!

**கட்டுரையாளர், எழுத்தாளர்.** ◆




# உண்மையைத் தேடி

முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடும் கார்த்திக்கேயனின் கூற்று.

ரகோத்தம்மன் தன் புத்தகத்தில் போட்டோ கிராப்பர் அரிபாபுவின் ஏழைத்தாய் 100 ரூபாய் நோட்டுகளைக் கத்தையாக வைத்து இருந்தது தனக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. பல முறை அவர்கள் வீட்டிற்குச் சென்றோம். அப்போது அந்த குடிசைக்குப் பின்னால் ஒரு வீடு இருந்ததாகவும் அதில் அரிபாபு தங்கியிருந்தாகவும். அங்கு விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் அனைத்தையும் சேர்த்து வைத்ததாகவும். விடுதலைப் புலிகளுக்கும் அரிபாபுவிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததா கவும். இதனால் பொருளாதாரத்தில் அரிபாபு உயர்ந்து இருந்ததாவும் கூறுகிறார்.

ஆனால் கார்த்கேயன், ராஜீவகாந்தி இறந்த மறுதினம் அரிபாபுவின் தந்தையிடம் விடுதலைப் புலி சம்மந்தப்பட்ட எதையும் உங்கள் வீடுகளில் வைத்துக்கொள்ளாதீர்கள் எங்காவது மறைத்து வைத்து விடுங்கள் என்று கூறியதன் பேரில் அருகில் இருந்த அவரது சகோதரியின் வீட்டில் மறைத்து வைத்து விட்டனர். (சற்றும் எதிர் பாராமல்) அது எங்களிடம் கிடைத்தது).

அரிபாபுவின் நண்பர் ஒருவர் அரிபாபுவின் வீட்டிற்கு புகைப்படம் தேவை என்று சென்ற போது அவரை அரிபாபுவின் சகோதரியின் வீட்டிற்கு சென்று தேடிப் பார்க்க அனுப்பி விட்டனர். அங்கே சென்ற நண்பர் ஏராளமான விடுதலைப்புலிகளின் பிரசுரங்கள், இதர ஆவணங்களைப் பார்த்தவுடன் அதிர்ச்சியடைந்து, விடுதலைப்புலிக்கும், அரிபாபுவிற்கும் தொடர்பு உண்டு என் அறிந்து அந்த ஆவணங்கள், பிரசுரங்கள் என அனைத் தையும் பார்சலில், தமிழக காவல்துறைத்

4 • இராஜாசிங்

தலைவருக்கு அந்த நபர் அனுப்பி வைத்தார். அது எங்கள் கையில் வந்து சேர்ந்தது. இதனால் அரிபாபு, விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என நாங்கள் திட்டவட்டமாக தெரிந்து கொண்டோம் எனக் கூறுகிறார்.

இதில் என்ன வேடிக்கை என்றால் விசாரணை அதிகாரி தன்னுடைய திறமையால் அரிபாபு விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என கண்டு கொண்டோம் என்று கூறுகின்றார்.

ஆனால் கார்த்திகேயன் சென்னை ஆணையர் கொடுத்த பார்சலால் அரிபாபுவை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனத் தெரிந்து கொண்டோம் என்று கூறுகின்றார். இரண்டு அதிகாரிகளின் கூற்றிலும் வேறுபாடு இருக்கின்றது இதில் எது உண்மை.

இதில் விசாரணை அதிகாரி உண்மையை சொல்லுகின்றாரா அல்லது அந்தக் குழுவிற்கு தலைமையேற்றுள்ள அதிகாரி உண்மையை சொல்கின்றாரா?. எது உண்மை அல்லது இரண்டுமே பொய்யா!!!

சண்முகம் என்ற கடத்தல்காரர் தன் ஆட்களை வைத்து குழிகள் தோண்டி பெட்ரோல், டீசல், ஆயுதங்கள் போன்றவற்றை விடுதலைப்புலிகள் படகுகள் வரும்வரை மறைத்து வைப்பார். விடுதலைப்புலிகள் வந்து தங்கி இளைப்பாற, இவர் வீட்டு அருகில் காட்டேஜ் கட்டிவைத்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகளின் அரசியல் குழு, சப்ளைக்குழு, உணவுக்குழு என அனைத்து பிரிவினரிடமும் சண்முகத்திற்கு நல்ல தொடர்பு உண்டு. இவர் புலிகளுடன் வயர்லெஸ் மூலமும் தொடர்பும் கொள்வார் என்றால், சண்முகம் பல நூறு ஆள்பலமும், பண பலமும் உள்ளவரா கத்தான் இருந்திருக்கக் கூடும். கடத்தல்காரர் சண்முகத்தை போலீஸ் காவலில் எடுக்கும் முன் கார்த்திக்கேயன் திறமையான் கருப்புப் பூனைப் படையை வரவழைத்து இருக்கின்றார். அதன்பின் நீதிபதி முன் ஆஜர்படுத்தி போலீஸ் காவலுக்கு அனுமதி பெற்று இருக்கின்றனர். அதன் பின்னர் வேதாரண்யம் சென்று அவரது குழு ஆயுதம் மற்றும் ஓயர்லெஸ் செட்டை தோண்டி எடுத்தது. 121 அட்டை பெட்டியில் பயங்கர வெடி பொருள். 121 அட்டை பெட்டியில் பயங்கர வெடி பொருள், 6 டிரம்களில் பெட்ரோல் டீசல் எடுத்தனர். இருள் சூழ்ந்த மாலை நேரத்தில் தொடங்கிய தேடுதல் வேட்டை மறுநாள் காலை நேரம் வரை தொடர்ந்து நடந்தது என்கிறார்கள். இதனால் டிஜஜி தலைமையிலான குழு மீண்டும் மீண்டும் தீவிரமாக சண்முகத்தை விசாரித்த இருக்கின்றது.

சண்முகத்தை டிஜஜி யே நேரில் விசாரித்தாகவும் கூறுகின்றார்கள்.

அங்கே பங்களாவில் இரண்டு அறைகள் இருந்ததாகவும். ஒரு அறையில் இரண்டு மூத்த அதிகாரிகளும் இன்னொரு அறையில் ஒரு துணைக் கண்காணிப்பாளரும் மூன்று இன்ஸ பெக்டர்களும் இருந்தனர். தவிர இரண்டு உள்ளூர் கான்ஸ்டபில்களும் சிறப்பு புலனாய்வு குழுவிற்கு உதவியாக இருந்தனர் என்றும் சண்முகத்தை விசாரித்த மூத்த அதிகாரிகள் அன்று இரவு சண்முகத்திற்கு கை விலங்கிட்டு உள்ளூர் போலீஸ் ஸ்டேசனில் வைக்கும்படி உத்தரவிட்டதாகவும் அப்போது இரவு 9 மணி இருக்கும் என்றும் சண்முகம் இரவு உணவு உண்டு கை கழுவ வெளியே சென்றதாகவும். கூடவே ஒரு கான்ஸ்டபிலும் சென்றதாகவும் கை கழுவ வெளியே சென்ற சண்முகம் உள்ளே வரவில்லை அங்கிருந்து தப்பி அடர்ந்த காட்டிற்குள் ஓடிவிட்தாகவும் கார்த்திகேயன் கூறுகின்றார்.

பெரும்பாலும் கடத்தல்காரர்கள், ஆள்பலம், பணபலம், மிக்கவராக இருப்பர், இதை சண்முகம் வெகுவாகவே பெற்று இருக்கிறார். அதனால்தான் நீதிமன்றக் காவல் எடுக்கும்போது கார்த்திகேயன் சிறப்பு பூனைப் படையை வரவழைத்து இருக்கிறார் இவ்வளவு முக்கியத்துவத்தை பெற்ற ஒரு விசாரணைக் கைதி எப்படி அலட்சிய குறைவாக நடத்தப்பட்டு மறுநாள் தூக்கில் தொங்கினார்? கார்த்திகேயன் எழுதிய புத்தகம் இத்தகைய

சந்தேகங்களை எல்லாம் எழுப்புகிறது.

ஆனால் ராகோத்தமன் அவரது புத்தகத்தில் எழுதியிருந்தது என்னவென்றால், வேதாரண்யம் பயணியர் விடுதியில் சி.பி.ஐ. முகாமிட்டு இருந்த இடத்திற்கு சண்முகத்தின் உறவினர் ஒருவர் வந்தார். அவருடைய பெயர் சீத்தாராமன் அவரும் கடத்தல் தொழில் செய்பவர்தான். சற்று நேரம் சண்முகமும் அவரும் பேசிக்கொண்டிருக்க சிறிது நேரத்தில் சீத்தாராமன் சண்முகத்தை கண்டபடி திட்டினார். சண்முகம் செய்த காரியத்துக்காக கண்டித்திருக் கக்கூடும் என நினைத்தேன். அவர்கள் தனியே பேசியதால் அது குறித்து எங்களுக்கு தெரியாமல் போய் விட்டது.

ஆனால் முதன் முதலில் சண்முகம் அச்சத்தில் அகப்பட்டது அப்பொழுதுதான். விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயல்கள் நடந்து கொண்டி ருப்பது குறித்த அச்சம், மாட்டிக் கொண்டோமே என்ற பயம். இனி என்ன செய்து, எப்படி மீள்வது என்று எண்ணித்தான், அவர் தப்பிக்க முயற்சித்தார். கை கழுவச் செல்வது போல வீட்டின் பின்புறம் சென்றார். அப்படியே திரும்பிப்பாராமல் ஓடத் தொடங்கினார். இத்தனைக்கும் அவருடன் ஒரு கான்ஸ்டபில் இருந்தார். ஓடிய நபரை துரத்திப் பிடிக்காமல் அவர் பதற்றத்தில் உள்ளே ஓடி வந்து எங்களிடம் தகவல் சொல்ல இடைப்பட்ட நேரத்தில் சண்முகம் அடர்ந்த புதருக்குள் காணாமல் போய் இருந்தார் என்று எழுதுகிறார்.

ரகோத்தமன் விருந்தினர் விடுதி என்று கூறுகின்றார். கார்த்திகேயன் உள்ளூர் காவல் நிலையம் என்று கூறுகின்றார். இதிலிருந்தே இருவரும் பொய் கூறுவது அம்பலமாகிறது. நாட்டில் உயர்ந்த பதவியில் இருக்கும் இந்த அதிகாரிகளின் உண்மை நிலை எப்படி இருக்கிறது பாருங்கள். விடுதலைப்புலிகள் ஏன் சண்முகத்தை கொலை செய்ய வேண்டும் சண்முகம் விடுதலைப் புலிகளுக்கு தேவையான பொருட்களை கடத்து பவர்தானே.

கூலிப்படையாக வந்த சிவராசன், தாணு தன்னிடம் வரவில்லை. வேறு விதமாக வந்து வேறு இடத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். என்னிடம் விடுதலைப்புலிகள் மாத்திரம்தான் வருவார்கள். என்ற உண்மையை சன்முகம் சொல்லியிருக்கிறார். இந்த உண்மையை சண்முகம் பிற்காலத்தில் சொன்னால், தங்களுடைய குட்டு வெளிப்பட்டு விடும் என்றெண்ணி ராஜீவ் காந்தியை கொன்றது விடுதலைப்புலிகள்தான் என்று பொய்யை மெய் யாக்க, உண்மை தெரியாமல் இருப்பதற்காக இவர்கள் இணைந்தே இதைச் செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் வலுக்கிறது. ராஜீவ் கொலையில் மூளையாக செயல்பட்ட கூட்டம், மூவரின் தூக்கை நீதிமன்றம் நிறுத்திய போது அதற்கு எதிராக ஸ்பெஷல் மனு ஒன்றை தாக்கல் செய்யத் துடிக்கிறது. அந்த ஸ்பெசல் மனுவால் எந்த பலனும் இல்லை. அப்படியிருந்தும் இவர்கள் ஏன் ஸ்பெசல் மனு தாக்கல் செய்கிறார்கள் என்றால் இம்மூவரின் மனநிலையை பாதிக்கச் செய்து அவர்கள் அகால மரணமடைய வேண்டும் என்ற தங்களது நிலைப் பாட்டை செயல்படுத்த முயல்கின்றார்களோ என்று எண்ணத் தொடங்ககிறது.

நாம் குற்ற மற்ற தமிழர்களை பாதுகாக்க நாம் இந்த விசாரணை அதிகாரிகள் விசாரிக்கும் காலத்தில் பல மிகப் பெரிய வெளியால்க மான தவருகளை செய்துள்ளனர். இதை (அவர்கள் செய்த குற்றத்தை) நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்று தடையானை அவர்கள் மீது வாங்கி அவர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும். அப்போது தான் இராஜிவ் காந்தி கொன்ற கூட்டம் தன் நிலைபாட்டை மாற்றி அமைக்கும். அப்போது தான் இக்குற்றமற்றவர்கள் வெளியே வரமுடியும் என்பது திண்ணம்.

குற்றமற்ற தமிழர்களைப் பாதுகாக்க, சந்தேகத் திற்கு இடமான அனைவரையும் விசாரித்து, உண் மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உண்மை யில் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை யைக் கொடுக்க வேண்டும்.

**தேடல் தொடரும்...**

# தமிழின் அருமை அறிந்த தருண்விஜய்



உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பாராளு மன்ற மேல்சபை உறுப்பினர் தருண்விஜய் குடியரசுத்தலைவர் பிரணாப்முகர்ஜியைச் சந்தித்து ஒரு மனு கொடுத்தாள். அந்த மனுவில் கூறியி ருப்பதாவது:

உலகின் தொன்மையான மொழியும் செம் மொழியாக அங்கீகாரம் பெற்ற மொழியுமான தமிழை சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்க வேண்டும். தமிழர்கள் நம் நாட்டிலும் உலகம் முழுவதும் பல்வேறு துறைகளிலும் தங்களுடைய மேலான பங்களிப்பை அளித்து வருபவர்கள்.

தமிழ் மொழியின் மேன்மையையும் பெருமை யையும் நிலைநாட்டு வண்ணம் அந்த மாநிலத்தின் மொழியை அந்த மாநிலத்தின் ஐகோர்ட்டின் பயன்பாட்டு மொழியாக அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

இந்திய சுதந்திரம் அடைந்து 68 ஆண்டுகள் ஆனபிறகும் இதுபோன்று ஒரு மாநிலத்தின் மொழியை அந்த மாநிலத்தின் உயர்நீதிமன்றத்தில் அங்கீகரிக்க வேண்டும் என்று குரல் கொடுப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

இது குறித்து தமிழக சட்டமன்றத்தில் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் தேதி தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. மேலும்தமிழகத்தின் அனைத் துத் துறைகளிலும் உள்ள அறிஞர்கள் இந்தக் கோரிக்கையை பல ஆண்டுகளாக முன் வைத்து வரு கின்றனர்.

எனவே, இந்த நியாயமான கோரிக்கையை ஏற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை பயன்பாட்டு மொழியாக உடனடியாக அங்கீகரிக்க உத்தரவிட வேண்டும்.

உலகத்துக்கே பெருமை சேர்க்கும் நூலான திருக்குறளை உலகுக்கு அளித்த திருவள்ளுவரின் பிறந்தநாளை உலக மொழிகள் தினமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்.

மனுவைக் கொடுத்துவிட்டு தருண்விஜய் எம்.பி., நிருபர்களிடம்,

கோரிக்கை மனுவை பொறுமையுடன் படித்துப் பார்த்த ஜனாதிபதி இது குறித்து விரை வில் பரிசீலனை செய்வோம் என்று உறுதி யளித்தார்.

வட இந்தியாவில் உள்ள 500 பள்ளிகளில் ஜனவரி 2015ல் திருவள்ளுவர் பிறந்த நாளை உலக மொழி நாளாக கொண்டாடப்போகிறோம்.

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி மற்றும் டாக்டர் ராமதாஸ் ஆகியோரும் ஏற்கனவே இந்த விஷயத்தில் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர். தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் வகையில் தான் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு முன் வைத்தேன்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்பு தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை சவுந்தரராஜனிடம் கலந்தாலோசித்தேன், என்றார்.

**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**

# புரட்சிக்கவி

9

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

## இயற்கை

4. மயில் – அகவல்

அழகிய மயிலே! அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங்குயி லிருந்து விருந்து செய்யக்
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்
தென்றல் உலவச் சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத் தூன்றி அங்கம் புளகித்
தாடு கின்றாய் அழகிய மயிலே!
உனது தோகை புனையாச் சித்திரம்
ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!
உள்ளக் களிப்பின் ஒளியின் கற்றை
உச்சியில் கொண்டையாய் உயர்ந்ததோ என்னவோ!
ஆடு கின்றாய்: அலகின் நுனியில்
வைத்தஉன் பார்வை மறுபுறம் சிமிழ்ப்பாய்!
சாயல்உன் தனிச்சொத்து! சபாஷ்! கரகோஷம்!...
ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனஉன் மெல்லுடல், ஆடல், உன்உயிர்,
இவைகள் என்னை எடுத்துப் போயின!
இப்போது, 'என்நினைவு' என்னும் உலகில்
மீண்டேன், உனக்கோர் விஷயம் சொல்வேன்:
நீயும் பெண்களும் 'நிகர்' என் கின்றார்!
நிசம் அது! நிசம்! நிசம்! நிசமே யாயினும்
பிறர்பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்!
அவர்கழுத்து உன்கழுத் தாகுமோ சொல்வாய்!
அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
இயற்கை அன்னைஇப் பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ,
கறையொன் றில்லாக் கலாப மயிலே,
நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்!
இங்குவா! உன்னிடம் இன்னதைச் சொன்னேன்:
மனதிற் போட்டுவை: மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற் காக!
புவிக்கொன் றுரைப்பேன்: புருஷர் கூட்டம்,
பெண்களை ஆதிப் பெருநாள் தொடங்கி
திருந்தா வகையிற் செலுத்தலால், அவர்கள்
சுருங்கிய உள்ளம் விரிந்தபா டில்லையே!




# நிகழ்வுகள்

'நாம்' அமைப்பின் இளைஞர் அணித்தலைவரும் தாரை டிராவல்ஸ் நிறுவனத்தின் அதிபருமான திரு. தாரை திருஞானம் அவர்களின் திருமணம் செப்டம்பர் ஒன்றாம் தேதி சேலம் நகரில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நல்ல மனம் படைத்த அனைவரும் மணமக்களை வாழ்த்தினர். நாமும் 'முற்றம்' சார்பில் மண மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.



சென்னை சாலிக்கிராமத்தில் இயங்கும் காவேரி பிரைமரி பள்ளி, ஏழை எளிய மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி வருகிறது. இப்பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி. பானுமதி அவர்கள் கல்விச் சேவை ஒன்றையே தனது மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார். இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுக்கு தரமான கல்வியைத் தருவதில் பள்ளி நிர்வாகமும், ஆசிரியப் பெருமக்களும் சிறப்பான பணியைச் செய்து வருகிறார்கள்.

இப்பள்ளியில் நடைபெற்ற, மாறுவேடப் போட்டியில் (தேசத்தலைவர்கள்) கலந்து கொண்ட மாணவர்களுக்கு நமது "முற்றம்" இதழ் சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் உதவி ஆசிரியர் உமா மகேஸ்வரி கலந்து கொண்டார்.



"நமது வெற்றி" "தின அரண்" இதழ்களின் ஆசிரியர் திரு. சங்கர்லால் அவர்களின் வளர்ப்புமகள் திருமணத்திற்கு வருகை தந்து, மணமக்களை வாழ்த்தியவர்கள்: பல்கலைவேந்தர் திரு. டி. ராஜேந்தர், "முற்றம்" ஆசிரியர் விசவனூர் வே. தளபதி, "சிங்காரச்சென்னை" ஆசிரியர் எஸ். ரங்கநாதன்.

# இனஅழிப்பை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள்



இலங்கை இறுதிக்கட்ட போரின் போது விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவுத் தலைவர்  நடேசன் தளபதி புலித்தேவன் கேனல் ரமேஷ் உள்ளிட்டோர் சிங்கள ராணுவத்திடம் சரண் அடைந்தனர் அவர்கள் அனைவரையும் சிங்களப் படையினர் சித்ரவதை செய்து பின்னர்  சுட்டுக்கொன்றனர்.

இது தொடர்பாக புதிய ஆதாரங்களை ஆஸ்திரேலியாவில் உள்ள அரசு சாரா நிறுவனம் ஒன்று வெளி யிட்டுள்ளது.

இலங்கை இறுதிக்கட்ட போரின்போது அங்கிருந்த தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பு படையைச் சேர்ந்த வீரர் ஒருவரும், ஆசிரியர் ஒருவரும் இதுதொடர்பான ஆதாரங்களை தங்களுக்கு வழங்கி இருப்பதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

தலைவர் பிரபாகரனின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த வீரர் கூறும்போது, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்கள் சரண் அடைய விரும்புவதாக சிங்கள அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பினார்கள். அதை உறுதி செய்யும் வகையில் சிங்களப் பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து நடேசன், உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் பலர் வெள்ளைக்கொடிகளுடன் சிங்கள படையினரிடம் சரண் அடைந்தனர்.

அவர்கள் சரண் அடைந்த சிலமணித்துளிகளில் அனைவரும் சுட்டுக்கொல்லப்பாட்டனர் என்று அவர் கூறியுள்ளார்.

அதேபோல ஆசிரியர் கூறும்போது, நான் சிங்கள படைகளால் கைது செய்யப்பட்டேன். பின்னர் என்னை ஒரு வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். அப்போது, புலித்தேவன் ரமேஷ் நடேசன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டு பிணமாகக் கிடந்தனர்.

அதை என் கண்ணால் பார்த்தேன் என்று கூறியுள்ளார். இந்தத் தகவல்களுடன் இலங்கையில் நடந்த பல்வேறு போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் அந்த நிறுவனம் தகவல்களை வெளியிட்டுள்ளது.



# ஐ.நா.விற்கு ஆதாரங்களை அனுப்புங்கள்!

ஈழத்தமிழர்களுக்கு, இலங்கை அரசு இழைத்த குற்றங்களை முன் கூட்டியே பதிவு செய்வோம். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் முன்னெடுக்கும் விசாரணைக்குரிய கால எல்லையாக 21.02.2002 முதல் 15.11.2011 வரை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஆதாரங்களை சமர்ப்பிக்கும் பொழுது உங்கள் தனிப்பட்ட பாதிப்புகளை மட்டும் சமர்ப்பிக்காமல் உங்கள் நீண்ட கால பட்டறிவுகளையும் ஆதாரத்துடன் உள்ளடக் கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இவ்வாறான பதிவுகள் தான், விசாரணக்குழு அடுத்த கட்ட விசாரணை யான இன அழிப்பிற்குரிய பாதையைத் திறந்து விடும் உங்கள் பதிவில் உள்ளடக்க கூடிய விபரங்கள்:

**சட்டத்துக்கு புறம்பான கொலை**

**சித்திரவதை**

**துன்புறுத்தல்**

**அச்சுறுத்தல்**

**காணாமல் போதல்**

**பாலியல் வல்லுறவு**

**கொத்துக் குண்டு**

**இரசாயன தாக்குதல்**

**வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள்**

**கைது செய்து காணாமல்போனோர்**


**நிலப்பறிப்பு மற்றும் குடிமனை அபகரிப்பு**

போன்றவற்றை கண்கண்ட சாட்சியங்களாகவோ ஆதாரமாகவோ பதிவு செய்யலாம். இத்துடன் இனப்படு கொலைக்கான ஆதாரங்களையும் சமர்ப்பிக் கலாம் கனடாவில் 2009ம் ஆண்டுற்குப் பின் அனைத்து விதமான மனித உரிமை மீறல்களுக்கான ஆதாரங் களை திரட்டும் முயற்சியில் போரால் பாதிக்கப்பட்டோருக் கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் (Center for War Victims and Human Rights - CWVHR) ஈடுபட்டுள்ளது. இத் தன்னார்வ தொண்டர் நிறுவனம் இது வரைக்கும் நூற்றுக்கணக்கான ஆதாரங்களை ஐக்கிய நாடுகள் சபைக்கு தேவையான வடிவத்தில் மிகவும் கவனமான முறையில் அவ்வாதாரங்களை தொகுத்து வருகின்றது. இன்நிறுவனத்தை தொடர்பு கொண்டு உங்கள் பதிவை விரைவில் மேற்கொள்ள வேண்டுகின்றோம்.

CWVHR **மின்னஞ்சல்:** info@cwvhr.org

மேலதிக விபரங்களுக்கு கனடியத் தமிழர் தேசிய அவையின் தொடர்பு இலக்கமான 416.830.7703 ஐ தொடர்பு கொள்ளவும்.

**கனடியத் தமிழர் தேசிய அவை**



# தமிழா இது?

தமிழீழப் பாவேந்தர் காசிஆனந்தன்

தமிழன் தன் தாய்மொழியைப் புகழ்ந்தான் போற்றினான் தலையில் வைத்துக் குதித்தான் காப்பாற்ற வில்லை.

சொந்த மொழி அழியப்போகிறதே என்னும் கவலை கொஞ்சமும் இன்றி வந்த மொழிக்கெல்லாம் தமிழன் வாசல் திறந்தான்.

தமிழ்மொழி தனித்தியங்கும் ஆற்றலுடையது என்பது தெரிந்தும் தமிழன் பிறமொழிகளை ஏற்று தமிழை அழித்தான்.

'வீட்டுக் கதவைக் கள்ளச் சாவியால் திறந்து
பீரோவில் இருந்த துட்டையும் கோணிப்பையில்
இருந்த பப்பாளிப் பழத்தையும் சப்போட்டாப்
பழத்தையும் கொய்யாப் பழத்தையும் திருடிய
சுமார் இருபது வயதுடைய கில்லாடி ஆட்டோ
ரிக்ஷாவில் தப்பி ஓடியபோது தகவல் அறிந்த
போலீஸ் ஏட்டு விரட்டி துப்பாக்கியால் சுட்டதில்
தோட்டாக்கள் அவனைத் தீர்த்துக் கட்டின'.

செய்தி ஏட்டில் ஒரு திருட்டு நிகழ்வைப் படித்து முடித்து அது செந்தமிழ்தான் என நினைக்கிறோம்.

ஆனால்...

தமிழா இது?

'சாவி' போர்த்துக்கீசியம், 'பீரோ' பிரெஞ்சு, 'துட்டு' டச்சு, 'கோணி' இந்தி, 'பப்பாளி' மலாய், 'சப்போட்டா' சப்பானியம், 'கொய்யா' பிரேசிலியன், 'சுமார்' பெர்சியன், 'வயது' சமற்கிருதம், 'கில்லாடி' மராத்தி, ஆட்டோ கிரேக்கம். 'ரிக்ஷா' சப்பானியம். 'தகவல்' அரபி, 'போலீஸ்' இலத்தீன், 'ஏட்டு' ஆங்கிலம். துப்பாக்கி துருக்கி, 'தோட்டா' உருது.

எந்த மொழியையும் தமிழன் ஏற்றுக் கொள்வான் என்பதற்கு இதைவிடச் சான்று தேவையில்லை.

◆

# இலக்கியச் சுவடுகள்

பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி எம்.ஏ.எம்.ஏ.எம்.எட்.

திண்ணிய தீந்தமிழ்ப் பல இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டது. இலக்கு உடையது இலக்கியம். மனிதக் குமுகாயத்திற்குக் குறிக்கோளை அறிவுறுத்தி, அதைப் பின்பற்றும் நெறிமுறைகளை அறிவித்து, அதில் வெற்றிக்கனியைப் பறிக்கச் செய்வது தான் இலக்கியத்தின் நோக்கமாகும்.

அகிலத்தில் உள்ள இலக்கியங்களை ஆய்ந்து அறிந்து பார்த்தால் ஓர் பொதுத் தன்மை காணப்படுகிறது. இலக்கியங்களில் வரும் கதா நாயகன் நல்லவன். வில்லன் கெட்டவன். இவ் விருவருக்கும் போர் நிகழும். வில்லன் தோல்வி யைத் தழுவுவான். நல்லவன் வென்றிடு வான். இதுபோன்ற எல்லா நிகழ்வுகளையும் இலக்கியங் கள் எடுத்துரைக்கிறது. இது உலகிய லுண்மை. இதனைப் பற்றி அறியாதவர்களுக்கு உணர்த்த உதவுவது இலக்கியம். நன்மையும், தீமையும் மோதும்போது நன்மை வெல்லும். தீமை அழியும் எனக் காட்டுவதற்குப் பயன்படுவது தான் இலக்கியம். இதனைக் கவியரசர் கம்பர் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற சொற் தொடரை, இராமாயணத்தில், எல்லா இடத்திலும் வலியுறுத் திக் கூறியுள்ளார்.

அமெரிக்க நாட்டில் ஒரு பொறியியற் கல்லூ ரியில் இலக்கியத்தை ஒரு பாடமாகச் சேர்த்து வைத்திருந்தார்கள். பொறியிலைப் படிக்கும் மாணவச் செல்வங்களுக்கு இலக்கியம் எதற்கு? என்று அக்கல்லூரி முதல்வரை, அனுகிக் கேட்க, அவர் நாங்கள் நல்ல பொறியியல் வல்லுநர்களை உருவாக்க விரும்புவதால் இலக்கியத்தை ஒரு பாடமாக வைத்திருக்கிறோம் என்றார். பொறியிய லைப் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் வல்லுநர் களாக உருவாகினால் மட்டும் போதாது. அவர்கள், நல்லவர்களாக இருக்க வேண்டு மென்பதே அவரின் குறிக்கோள். எனவே, பொறி யியல் மாணவர்கள் இலக்கியம் படிப்பது நலம் பயக்கும் என்று அவர் முடிவு செய்தார். வல்லவர் களாக மட்டுமல்லாமல் மாணவர்கள் நல்லவர் களாக வாழ வேண்டும் என்பதே இவரின் நோக்கம். அத்தகைய நோக்கத்தை நிறைவேற்ற இலக்கியம் படிப்பது நல்லதல்லவா.

பொதுவாக, இலக்கியங்களை, “நல்ல இலக்கியம்“ என்றும், நச்சு இலக்கியம் என்றும் இருவகைப் படுத்துவர். நாட்டுக்குத் தேவை நல்ல இலக்கியங்கள். அன்னப்பறவை நீரையும், பாலையும் கலந்து வைத்தால், பாலைப் பருகிவிட்டு நீரை விட்டு விடுமாம். அதுபோல் நச்சு இலக்கியத்தைப் புறந்தள்ளி விட்டு, நல்ல இலக்கியத்தை மட்டும் நாம் நாடவேண்டும்: படிக்க வேண்டும். சிறந்த இலக்கியங் களைப் படிப்பதால், பேரின்பம் நமக்குக் கிடைக்கும் அல்லவா. இலக்கியச் சுவடுகளில், மாங்குயில்



கூவிடும் பூஞ்சோலை மல்லிகை முல்லை போன்ற மலர்களின் மணம் வீசுகிறது. தென்றல் காற்று மெல்லத் தவழ்ந்து வருகிறது" என்ற வருணனையைப் படிக்குங்காலை நாம் பெருமிதம் கொள்கிறோம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது கணியன் பூங்குன்றனாரின் தொடர் பரந்த நோக் கத்தை ஊட்டுவதாககும். இலக்கியச் சுவடுகளின் சொத்து, என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கடமை உணர்வை வெளிப் படுத்தும் தொடர் ஒளிவீசித்திகழ்வது இலக்கியச் சுவடுகளில் தான், "நாமார்க்கும் குடீ அல்லோம்: நமனை அஞ்சோம்" என்ற பெருமித உணர்வை ஊட்டும் தொடர் பட்டொளி வீசிப் பறப்பது இலக்கியச் சுவடுகளில் தான்.

"இந்த உலகம் ஒரு நாடக மேடை: நாமெல்லாம் நடிகர்கள்" என்ற உயர்ந்த தத்துவத்தொடர்: பூத்துக் குலுங்கும் முல்லைப் பூ மணம் வீசித் திகழ்வது இலக்கியச் சுவடுகளில் தான். இத்தகைய இலக்கியச் சுவடுகள் எதற்கு என்று கேட்காமல், உணர்வுப் பூர்வமாக, நன்றாக நித்தம் படித்து, மகிழ்ச்சிக் கடலில் நீந்துவோமாக! ◆

---

## மனுநீதிச் சோழன்?



தேர் ஏற்றி
கன்றைக் கொன்றான்
இளவரசன்
நீதி கேட்டது
கன்றின் தாய்
மன்னன் மனுநீதியோ
மகனை
தேர் ஏற்றிக்
கொள்ளச் சொன்னான்!
சோழனின் நீதி அது.

நீ தவறு செய்கிறாயா
நானும் செய்கிறேன்
எனக்கு கொடுத்துவிடு
பணம் பத்துலட்சத்தை
உனக்கும் லாபம்
எனக்கும் லாபம்
ஊரார் எப்படியோ
போகட்டும் என்றான்
இன்றைய மனுநீதி.

# பயனுள்ள இணையதளங்கள்...!
# சான்றிதழ்கள்

1) பட்டா/சிட்டா அடங்கல்

http://taluk.tn.nic.in/edistrict_certificate/land/chitta_ta.html?lan=ta

2. அ-பதிவேடு விவரங்களை பார்வையிட

http://taluk.tn.nic.in/eservicesnew/land/areg_ta.html?lan=ta

3. விலலங்கச் சான்றிதழ்

http://www.tnreginet.net/igr/webAppln/EC.asp?tams=0

4. பிறப்பு இறப்புச் சான்றிதழ்

http://www.tn.gov.in/appforms/birth.pdf

http://www.tn.gov.in/appforms/death.pdf

5. சாதிச் சான்றிதழ்/வாரிசுச் சான்றிதழ்

http://www.tn.gov.in/appforms/cert-community.pdf

6. இருப்பிட மற்றும் வருமானச் சான்றிதழ்

http://www.tn.gov.in/appforms/cert-income.pdf

பயணச் சீட்டு முன் பதிவு

தொடர்வண்டி மற்றும் பேருந்து பயணச் சீட்டு

http://tnstc.ticketcounters.in/TNSTCOnline/

http://www.irctc.co.in/

http://www.yatra.com/

http://www.redbus.in/

வானூர்தி பயணச் சீட்டு

http://www.cleartrip.com/

http://www.makemytrip.com/

http://www.ezeego1.co.in/

D. E-Payments (Online)

1) BSNLதொலைபேசி மற்றும் Mobile Bill கட்டணம் செலுத்தும் வசதி

http://portal.bsnl.in/portal/aspxfiles/login.aspx

2) Mobile ரீ- சார்ஜ் மற்றும் டாப் அப் செய்யும் வசதி

https://www.oximall.com/

http://www.rechargeitnow.com/

http://www.itzcash.com/

3) E.B. Bill கட்டணம் செலுத்தும் வசதி

http://www.itzcash.com/

https://www.oximall.com/

http://www.rechargeitnow.com/

4) NEFT / RTGS மூலம் பிறர் ACCOUNT 'க்கு பணம் மாற்றும் வசதி

5) E-Payment செய்து வேண்டிய பொருள் வாங்கும் வசதி

http://www.ebay.co.in/

http://shopping.indiatimes.com/

http://shopping.rediff.com/shopping/index.html

6) Share Market – பங்குச் சந்தையில் online வணிகம் செய்யும் வசதி

http://www.icicidirect.com/

http://www.hdfcsec.com/

http://www.religareonline.com/

http://www.kotaksecurities.com/

http://www.sharekhan.com/

மாணவர்கள் மேற்படிப்புக்கான வங்கிக் கடன் விவரங்கள் மற்றும் விண்ணப்பங்கள்

https://www.sbi.co.in/user.htm?action=viewsection&lang=0&id=0%2C1%2C20%2C118

http://www.indianbank.in/education.php

http://www.iob.in/vidya_jyothi.aspx

http://www.bankofindia.com/eduloans1.aspx

http://www.bankofbaroda.com/pfs/eduloans.asp

http://www.axisbank.com/personal/loans/studypower/Education-Loan.asp

http://www.hdfcbank.com/personal/loans/educational_loan/el_indian/el_indian.htm

2) பள்ளி மற்றும் கல்லூரித் தேர்வு முடிவு / மதிப்பெண் பற்றிய தகவல் அறிந்துக் கொள்ளும் வசதி

http://www.tn.gov.in/dge/

http://www.tnresults.nic.in/

http://www.dge1.tn.nic.in/

http://www.dge2.tn.nic.in/

http://www.Pallikalvi.in/

http://www.results.southindia.com/

http://www.chennaionline.com/results

3. சமச்சீர்க் கல்வி பாடப் புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய

http://www.tn.gov.in/dge

4.இணையதளங்கள் மூலமாக 10th std, 12th std பாடங்களைக் கற்றுக்கொள்ளும் வசதி

http://www.classteacher.com/

http://www.lampsglow.com/

http://www.classontheweb.com/

http://www.edurite.com/

http://www.cbse.com/

5. வகுப்பிற்கான அரசு தேர்வு மாதிரி கேள்வித் தாள்கள் மற்றும் பாடங்களை படிக்க அல்லது பதிவிறக்கம் செய்ய

http://www.kalvisolai.com/

6) UPSC/ TNPSC/ BSRB / RRB / TRB க்கான பயிற்சி, தேர்வு, வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல் அறிந்து கொள்ளும் வசதி

http://www.tnpsc.gov.in/

http://www.tnpsctamil.in/

http://www.upsc.gov.in/

http://upscportal.com/civilservices/

http://www.iba.org.in/

http://www.rrcb.gov.in/

http://trb.tn.nic.in/

http://www.tettnpsc.com/

7) உள் நாடு மற்றும் உலக நாடுகளில் வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல் அறிந்துக் கொள்ளும் வசதி, பதிவு செய்து விண்ணப்பிக்கும் வசதி

http://www.employmentnews.gov.in/

http://www.omcmanpower.com/

http://www.naukri.com/

http://www.monster.com/

இந்தியக் ராணுவத்திலுள்ள வேலை வாய்ப்புகளை அறிந்திட

http://www.ssbrectt.gov.in/

http://bsf.nic.in/en/career.html

http://indianarmy.nic.in/

9) இந்திய கப்பல் படையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புளை அறிய

http://nausena-bharti.nic.in/

10) Face to Face chat / Interview நேர்காணல் செய்யும் வசதி

http://www.skype.com/

http://www.gmail.com/

http://www.yahoochat.com/

http://www.meebo.com/

***தொடரும்...***



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


அன்னை வேளாங்கண்ணி திருத்தலம்
42ம் ஆண்டு திருவிழா
ANNAI VAILANKANNI SHRINE - 42nd ANNUAL FEAST - 2014
Besant Nagar, Chennai - 600 090

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

# தமிழ்த் தேசியப் பேரியக்கம்

அழைக்கிறது

# வெளியார் அதிகரிப்பும் தமிழர் வாழ்வுரிமையும்

## சென்னையில் சிறப்பு மாநாடு

செ.தெ. நாயகம் மேல்நிலைப் பள்ளி,
தி. நகர், சென்னை

**28.9.2014 ஞாயிறு**
**காலை 9.30 - மாலை 7.00 வரை**



தோழர் **பெ. மணியரசன்**

**தலைமையில்**

வருங்காலத்திற்கு
வழிகாட்டும் மாநாடு

வாருங்கள்
தமிழர்களே!

விழாக் குழு

தொடர்புக்கு **9047162164, 9841949462**